# அன்னமய்யா ஓர் அறிமுகம்

டாக்டர். பொன். சௌரிராஜன், எம்.ஏ., பி.எச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர்
திருவேங்கடவன் பல்கலைக் கழகம் திருப்பதி - 2.

டாக்டர். க. சர்வோத்தமன்,
M.A. (Tel.), M.A. (Skt.), Ph.D., Vidwan, Rashtra Bhashapravina.,
விரிவுரையாளர், தெலுங்குத் துறை
திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி - 2.

1980
திருமலை திருப்பதி தேவஸ்தான வெளியீடு
திருப்பதி

T. T. D. Religious Publications Series No. 84

மலிவுப் பதிப்பு: விலை: 50 காசு

வெளியிடுபவர்:

பி. வி. ஆர். கே. பிரஸாத், ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்,
திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

அச்சிட்டோர்:

திருமலை - திருப்பதி தேவஸ்தான அச்சகம்,
திருப்பதி.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| 1. | அன்னமய்யா வாழ்க்கைக் குறிப்பு | ... | 5 |
| 2. | அன்னமய்யாவும் திருப்பதியும் | ... | 16 |
| 3. | அன்னமய்யாவும் ஆழ்வார்களும் | ... | 22 |
| 4. | அன்னமய்யா பாடல்களின் அருமையும் பெருமையும் | ... | 28 |

# முன்னுரை

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார் தெலுங்கு மொழியில் அமைந்து விளங்கும் தாள்ளபாக்க அன்னமய்யா இலக்கிய வெளியீட்டுக்கும், விளம்பரத்துக்கும் கங்கணம் கட்டிக்கொண்டு பலவாறு முயன்று வருவது அனைவரும் அறிந்ததே. அவற்றுள் அன்னமய்யாவின் பெருமையை வேற்று மொழியாரும் அறியச் செய்யும் ஒரு முயற்சியில் தமிழர்கள் அன்னமய்யா பற்றியும், அன்னமய்யா இசைப் பாடல் அருமை குறித்தும் அறிமுகம் செய்யும் பணி எங்கட்கு வாய்த்தது. இந்த தெய்வத் திருப்பணி வாய்ப்பினை வழங்கிய திருமலை திருப்பதி தேவஸ்தான செயலாட்சித் தலைவர் திரு. பி. வி. ஆர். கே. பிரசாத், ஐ. ஏ. எஸ். அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது.

இப்பணியில் எங்கட்கு ஊன்று கோலாய் அமைந்தும் அவ்வப்போது எங்களை ஊக்கியும் இந்த நூல் உருவாகத் துணை செய்த டாக்டர். எஸ். பி. இரகுநாதாசார்ய எம்.ஏ., பிஎச்.டி. அவர்கட்கு நாங்கள் நன்றியுடையோம்.

**பொன். சௌரிராஜன்,**
**க. சர்வோத்தமன்.**

# 1. அன்னமய்யா வாழ்க்கைக் குறிப்பு

புனித கங்கையும் புண்ணிய காவிரியும் பாய்ந்து பயன் தரும் இந்த பாரதப் பூமியில் பதினைந்தாம் நூற்றாண்டு சமய நோக்கிலும் போக்கிலும் ஒரு முக்கிய நூற்றாண்டு ஆகும். இந்தியா எங்கும் பரந்து விளங்கிய இந்து சமயம் நெறியும் குறியும் தவறி, கொள்கையில் தடுமாற்றம் நிலவிய காலம் அது. வட இந்தியா முழுதையும் வேறு சமய மன்னர்கள் கைப்பற்றி ஆண்டதோடு அமையாது தென்னகம் நோக்கியும் மண்ணாசையும் மதவெறியும் கொண்டு படையெடுத்து வந்து திருக்கோயில்களையும் திவ்வியத் தலங்களையும் பாழ்படுத்திய காலம் அது. மாபெரும் இந்து பேரரசு ஒன்றைத் தென்னகத்தே நிறுவிய திரு. கிருட்டிண தேவராயர் தோன்றுதற்குச் சற்று முந்திய காலம் அது. இந்து சமயம் மெலிந்து கொண்டிருந்த அந்த நாளில்தான் மீண்டும் ஒரு பக்தி இயக்கம் இந்திய மண்ணில் உருவாகித் தென்னகத்தே மலர்ந்தது. அம்மலர்ச்சி தமிழகத்தே வேதாந்த தேசிகர், பிள்ளைலோகாசாரியர் என்பார் மூலம் கமழத்துவங்கியது; கன்னட தேசத்தில் வியாசராயர், புரந்தரதாசர் முதலியோராய் முகிழ்த்தது; தெலுங்கு நாட்டில் அன்னமய்யாவாக அவதரித்தது.

அன்னமய்யா மறையோர் குலத்தில் நந்தவரீகப் பிரிவில் இருக்கு வேதத்து அசுவலாயணத் தொடர்பினர்; பரத்துவாச குடியைச் சேர்ந்த நாராயண சூரி என்பார் திருமகனார். இவர் தாய் இலக்கமாம்ப ஆவர். கி. பி. 1424, வைகாசித்திங்கள் விசாகநாள் திருவேங்கடநாதன் நந்தக அம்சம் பொருந்த அவதரித்த கவிஞர்.

இவர் முன்னோர் ஆந்திர மாநிலம் கடப்பை மாவட்ட இராசம் பேட்டை வட்டத்திலுள்ள தாள்ளபாக்கத்தில் பரம் பரையாக வாழ்ந்து வந்தோர் ஆவர். இவர்கள் மறையவர் ஆயினும் வேளாண்மைத் தொழிலிலேயே ஈடுபட்டு வரலாயினர். பெயருக்கேற்பப் பெற்றோர் இருவரும் திருமலையப் பனிடம் பேரன்பு பூண்டொழுகினர். பிள்ளை அன்னமய்யாவும் பெற்றோர் வழியில் திருவேங்கட நாதனிடம் பிள்ளைப்பருவம் முதற்கொண்டே பேரார்வத்தராய் விளங்கினார்.

மறையவர் குலமரபுப்படி ஏழாம்வயதில் அன்னமய்யாவுக்கு உபநயணம் நிகழ்ந்தது. கல்வி கற்கத் துவங்கினர். வித்தைகளோ இளையஅன்னமய்யாவை நாடி வரலாயின. கல்லாமலேயே அனைத்துக் கல்வியும் இவருக்குக்கைவரப் பெற்றன.

அந்த இளம்பருவத்திலேயே அன்னமய்யா தன்னை மறந்து இறைவன் அன்பில் தோய்ந்தவராய் வாழ்ந்து வரலானர். ஆனல் விண்ணை நாடித் தெய்வீக எண்ணத்தில் இயங்கும் அவரை இந்த மண்ணுலகம் உணர்ந்து கொள்ளவில்லை. அப்பா அம்மா, அண்ணன் அண்ணி என்னும் உறவினர்கள் சின்ன அன்னமய்யா உலகியல் உணர்விலிருந்து விலகிச் செல்வதை ஒருவாறு ஊகித்து உணர்ந்தனர். உலகியலில் அவரை ஈடுபடுத்த விரும்பினர். தாம் பரம்பரையாகச் செய்துவரும் வேளாண்மைத் தொழிலுக்கு அவரை ஈர்த்தனர். நாள்தோறும் தங்களோடு வேலைசெய்யப் பணித்தனர். என்ன உலகம்! என்ன உறவு! என்னை இறைவனிடமிருந்து பிரிக்க இவர்கள் யார்?! அரிநாமம் ஒன்றையே உள்ளத்தில் கொண்டு உருக இயலாமல் தடுக்கின்றுர்களே என்று பல எண்ணி வருந்தினர். தில்லையம்பலவாணனைக் காணத் தவித்த நந்தனர் போல 'என்று காண்பேனே என் வேங்கடநாதனை' என்று ஏங்கி வரலானர். இவ்வாறு இவர் வாழ்ந்துவரும் நாளில் ஒருநாள் பசுக்களுக்கு வைக்கோல் கொண்டு வர ஊருக்குப் புறத்தே இவரை அனுப்பிவைத்தார் உறவினர் ஒருவர்.

வைக்கோல் சுமக்க வந்தவனே நான்; வானவர் தலைவனை வணங்கேனே நான் என்று எண்ணி ஏங்கியவராய்ச் சென்று கொண்டிருந்த இவர் செவியில் 'கோவிந்தா! கோவிந்தா!' என்ற கூட்டொலி கேட்டது. இவர் மனம் திருவேங்கடநாதனை நினைத்தது. திருமலைக்கு வந்து திருமலையப்பனைத் தொழுது மீண்ட அடியவர்கள் அவ்வப்போது திருவேங்கடநாதன் பற்றிக் கூறிய செய்திகளெல்லாம் இவர் நினைவுக்கு வரலாயின. மனங்கமழும் பொழில் சூழ்ந்த, உயர்ந்தோங்கிய சிகரங்கொண்ட, விண்நீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்கள் சூழ்ந்த, குளிரருவி குதித்தோடும் வேங்கட மலையை நினைந்தார்; பிறையேறு சடையானும் பிரமனும் இந்திரனும் முறை

யாகத் தொழுதேத்தும் மறையோனை நினைந்தார்; செடியாய வல்வினைகள் தீர்க்கும் நெடியோனை நினைந்தார். அன்னமய்யா உள்ளம் உலகை மறந்தது; உலகியலை மறந்தது; உறவையெல் லாம் மறந்தது; 'கோவிந்தா கோவிந்தா' என்று கூடிப் பாடிப் போய்க்கொண்டிருந்த கூட்டத்தோடு சேர்ந்து திருவேங்கடம் நோக்கிப் புறப்பட்டு விட்டார்.

கீழ்த்திருப்பதி அடைந்தார் அன்னமய்யா. கங்கம்மாவைத் தொழுதார். இரவு கழிந்தது. பொழுது புலர்ந்தது. அன்ன மய்யா வாழ்விலும் புதியதோர் பொலிவு தோன்றலாயிற்று. காலையில் எழுந்ததும் அடிப்படி நரசிம்ம சுவாமியை வணங் கினார். கோவிந்தா கூட்டம் புறப்பட்டது. இவரும் அதனுடன் கூடி மலையேறத் துவங்கினார். தலையேறு குண்டு, கற்பூரக்கால்வாய் தாண்டி 'முழங்கால் முறித்தான்' என்று கூறப்பெறும் செங்குத்து மலைவழியே ஏறத்துவங்கினர்.

இம்மலை கருநிறக் கல்லால் உருவாகியது. கண்ணன் உரு அமைக்கும் 'சாலக்கிராமம்' என்னும் ஒருவகைக் கல் போன்றது. எனவே அக்காலத்தில் அடியவர் திருக்கூட்ட மெல்லாம் அதன்மேல் அடியெடுத்து வைத்து நடக்க அஞ்சி முழங்காலிட்டு முன்னேறுதல் வழக்கம். அன்னமய்யாவும் அப்படியே ஏறிச் சென்றார். அப்பெரியோர் கூட்டம் இவரை விட்டு விரைந்து முன்னே போய்விட்டது. தனியராய்ப் பின் தாவித் தாவிச் சென்ற அன்னமய்யா சோர்ந்து போனார். பசி வேறு சேர்ந்து கொண்டது. கண் இருண்டது. காதடைத்தது. சிறுவர் அன்னமய்யா மயங்கி விழுந்தார். அப்போது ஓர் அற் புதம் நிகழ்ந்தது. அலமேலுமங்கை அங்கே தோன்றினாள். திவ்விய அமுதம் கொணர்ந்து அவருக்கு ஊட்டினாள். திரு வேங்கட நாதனை வணங்கும் வழியினைக் காட்டினாள். பின் மறைந்து போனாள்.

'கனவா நினைவா' என்று கலங்கினார். அம்மா! அலர்மேல் மங்கம்மா என்று அரற்றினார். அவர் அறியாமல் அவர் நா பாடத்துவங்கிற்று. நூறு பாடல்கள் பாடினார். அலர்மேல் மங்கையைப் பொருளாகக் கொண்ட அப்பாடல்கள் 'அலர்மேல் மங்கை சதகம்' என்று வழங்கலாயிற்று. அப்பாடல் ஒவ்

வொன்றின் முடிப்பு மட்டும் 'வேங்கடேசுவரா' என்று அமைந் திருந்தது. அப்படி அவர் பாடத்துவங்கிய போது அவருக்கு வயது பதினாறு. அச்சம் நீங்கியது. அமைதி தோன்றியது. ஆற்றல் கொண்டார். தொடர்ந்து மலையேறினார். சுவாமி புஷ்கரணி கண்டார். உடல் குளிர உளங்குளிர நீராடினார். பெரிய கோபுரம் கண்ணில் பட்டது. தன்னை மறந்த லயந் தன்னில் சிறிது நேரம் இருந்துவிட்டுக் கோபுரம் நோக்கிச் சென்றார்; கருடக் கம்பத்தைக் கண்டார். வலம் வந்து பக்தி வயப்பட்டு திருமலையப்பனைப்பற்றிப் பாடல் பல பாடினார். மேலும் மலையேறிச் சென்று பாண்டவர் தீர்த்தத்தில் நீராடி தோய்த்து அழுக்கு நீக்கிய தன்னுடைக் காய்வதற்குள் திரு வேங்கடமுடையான்மீது நூறு பாடல் பாடினார். அவனைக் காணும் ஆவல் தூண்டக் கோயில் நோக்கி விரைந்து வந்தார். என்ன ஏமாற்றம்! கோயில் சாத்தி இருந்தது. தான் இயற்றிய திருவேங்கடமுடையான் சதகத்தை இசை ததும்பப் பாடினார். தாழ்ப்பாள் கழன்றது. மூடியிருந்த கதவுகள் தாமே திறந்து கொண்டன. திருவேங்கட நாதன் திருக்காட்சியினைக் கண் டார்.

இப்படித் தெய்வத் திருவருள் காட்சியில் திளைத்த அன்ன மய்யா அன்றைய இரவு ஒரு வீட்டுத் திண்ணைமீது படுத்துறங் கினார். அன்று துவாதசி. அப்பொழுது கணவிஷ்ணு என்ற முனிவர் ஒருவர் வந்து, 'தம்பி! என் கனவில் திருவேங்கட முடையான் தோன்றி உன் வருகையை எனக்கு உணர்த்தி உனக்கு பஞ்ச சம்ஸ்க்காரம் செய் என்று என்னைப் பணித் தருளினார், என்று பல கூறிச் சங்கு சக்கரம் பொறித்துச் சரணாகதித் தத்துவத்தைப் போதித்தார். இப்படியே இறைவன் திருவருள் உணர்வில் எங்கும் செல்ல மனமில்லாது அங்கேயே தங்கி விட்டார்.

வைக்கோல் கொண்டு வரச் சென்ற சிறுவன் அன்ன மய்யாவைக் காணாமல் பெற்றோர் தவித்தனர். தாய் இலக்க மாம்ப அழுது புலம்பினார். அங்கு மிங்கும் செல்வோரையும் வருவோரையும் பார்த்துத் தன் மகன் அன்னமய்யாபற்றி அறிந்தால் கூறுங்களேன் என்று வேண்டினார். இறுதியில் ஒரு

நாள் திருவேங்கட நாதன் திருமலையில் அன்னமய்யா வாழ்ந்து வருவதாக அறிந்தார். ஓடோடியும் வந்து வீட்டிற்கு வருமாறு வேண்டினார். 'இதுவும் இறைவன் திருவுள்ளம் போலும்' என்றெண்ணியவராய் அன்னமய்யா தன் தாயுடன் தன் சொந்த ஊராகிய தாள்ளப் பாக்கத்தை அடைந்தார். அங்கே அவரைச் சார்ந்தோர் அவருக்கு திருமலம்மா, அக்கலம்மா என்னும் இரு மகளிரை மணம் செய்வித்தனர். அகோபலம் மடத்தை நிறுவிய ஆசாரியர்களுள் ஒருவராகிய ஆதிவன் சடகோபமுனி என்று கருதப்பெறும் சடகோபமுனியிடம் வேதாந்தப் பாடம் கேட்டார்.

வால்மீகி இராமாயணத்தை இசைப் பாடலாக எழுதினார். அவை எங்கும் பரவின. இனிய புகழை இவர்க்கு ஈட்டித் தந்தன. திருமால் அருள்பற்றி ஆர்வத்தோடு இசையமைத்துப் பாடும் இவர் தம் இசைத் திறனைக் கண்டோர் இவரைத் தும்புரரோ, நாரதரோ, மானிட வடிவம் பெற்று வந்த கந்தர்வரோ என்று இவரைப் பாராட்டலாயினர்.

இவர் புகழ் எங்கும் பரவியது. அது டங்குடூரு அரசர் சாளுவ நரசிம்ம ராயர் செவியினையும் எட்டியது. இத்தகு புகழ் பெற்ற தெய்வப் புலவரைத் தன் அவையில் அமைச்சராக அமைத்துக் கொள்ள விரும்பினார். அன்பு காட்டி 'அருச்சுனனுக்குக் கண்ணன் அமைந்ததுபோல் எனக்குத் தாங்கள் அருளுதல் வேண்டும்; என்னோடு வந்து இருத்தல் வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

அன்னமய்யா அன்பும் அருளும் இராயருக்குத் தொடர்ந்து கிடைத்து வந்தன. அமைச்சராக மட்டுமின்றி அருங்குருவாகவும் அன்பு வழி காட்டியாகவும் ஆக்குவிக்கும் தலைவராகவும் அன்னமய்யா இராயர் அவையில் விளங்கினார். சிற்றரசராய் இருந்த சாளுவ நரசிம்ம ராயர் மெல்ல மெல்ல வளர்ந்து பெனுகொண்டப் பேரரசின் தலைவரானார். ஆட்சி விரிவும் அரசப் பெருமையும் மிக மிக இராயருக்கு அன்னமய்யாவிடம் வளர்பிறைபோல் அன்பும் மிகுந்து வரலாயிற்று.

அன்னமய்யா ஒரு பக்தர் மட்டுமல்லர். சிறந்த கவிஞருங்கூட; அத்துடன் பண்ணிசைத்துப் பாடும் திறனும் பரமன்

அவர்க்கு அளித்திருந்தான். ஆனால் இறைவன் சன்னிதி முன்னன்றி வேறு எங்கும் வேறு எவருக்காகவும் பாடாத இறையன்பும் அவர் கொண்டிருந்தார். ஒரு நாள் நரசிம்மராயர் தம் அவையில் அன்னமய்யாவைப் பாடுமாறு கேட்டுக் கொண்டார். அரசரது அன்பு விருப்பத்தைத் தட்டிக் கழிக்க இயலாமல் அப்போது தாமியற்றிய அகப்பொருள் நயம் அமைந்த அழகான ஒரு பாடலைப் பாடினார். அப்பாடலில் பின்வரும் அழகான கற்பனை ஒன்று அனைவரையும் கவர்ந்தது. 'தலைவன் நெற்றியில் தலைவி முத்தமிடுகிறாள். அவள் வாய் இதழ்களில் இங்குமங்குமாகத் தலைவன் நெற்றியில் இட்டு இருந்த கருநீலக் கத்தூரித் திலகத் துளிகள் பதிந்துவிட்டன. செவ்விய பட்டோலை ஒன்றில் கரியமையிற் எழுதிய கடிதத்தை அக்காட்சி நினைவூட்டுகிறது, எனும் கற்பனை எல்லாம் அமைய "கத்தூரித் துளிகள் தூவினாற் போலே பதிந்துள்ள செவ்விய இளந்துளிர் போன்ற இவள் வாய் இதழ் காதல் கடிதமோ" என்று பாடினார். அரசன் மனம்மிக மகிழ்ந்தான். அவைப் புலவர்கள் 'காதல் கற்பனையில் காளிதாஸரையும் வென்றுவிட்டார் அன்னமய்யா' என்று பாராட்டிப் போற்றினர். அரசனும் பரிசு பல வழங்கியும் மனம் நிறைவு கொள்ளாமல் தன் அரண்மனைக் கருகில் மாளிகை ஒன்று அமைத்துத் தந்தான். நாள்தோறும் திருவேங்கடவன் பற்றி அன்னமய்யா பாடும் பாடல்களைக் கேட்டு அகம் மகிழ்ந்து வரலானான்.

இப்படி நாள் சில கழிந்தன. ஒருநாள் நரசிங்கராயர் மனத்தில் தன்னைப்பற்றிச் சில பாடல்களும் அன்னமய்யா பாட வேண்டுமென்ற அற்ப ஆசை ஒன்று எழுந்தது. அது அவரால் அடக்க முடியாத அளவு வெறியும் வேகமும் கொண்டு அவர் நெஞ்சில் வளர்ந்தது. அன்று அரசவையில் அனைவரும் திரண்டிருந்தனர். சிற்றரசர்கள், அமைச்சர்கள், புலவர்கள். பாடகர்கள், தூதுவர்கள் இப்படிப்பலர் கூடியிருந்தனர். இந்த நல்லநேரத்தில் இத்தனைப்பேருக்கும் முன்னிலையில் அன்னமய்யா தன் வேண்டுகோளைத் தட்டமாட்டார் என்ற துணிவு அரசர் நெஞ்சில் எழுந்தது. என்றாலும் உடனே தன்னைப்பற்றிப் பாடுமாறு கேட்க அஞ்சியவராய்த் திருவேங்கடநாதனைப்பற்றிச் சில பாடல்கள் பாடுமாறு முதலில் வேண்டினார். இறுதியில் மெல்ல

தன் ஆசையை அவையோர் அறிய அன்னமய்யாவிடம் வெளியிட்டார். ''என்னுவது எத்தனை நாளைக்குப் போதும் மன்னு மனிசரைப் பாடிப் படைத்த பெரும் பொருள்! என் இன்கவி யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்; மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்''. என்னும் ஆழ்வார்கள் உள்ளக் கிடக்கை அன்னமய்யா நெஞ்சில் நிலவியது. அரிஹரி என்று செவியைப் பொத்திக்கொண்டார்.

''நரஹரின் நாமத்தில்
நாள்தோறும் தோயுறும்
நா எந்தன் நாவிதால்
நரனையும் துதிப்பேனோ—இந்த
நலத்தை நான் மதிப்பேனோ''

என்று அரசர் வேண்டுகோளுக்கு இணங்காது மறுத்து மீண்டும் ஆண்டவனையே பாடினார். அவையோர் பலர் முன்னிலையில் தன் ஆணையை மறுத்த அன்னமய்யா செயல் அரசனின் மனதில் அவமானத்தை உண்டாக்கியது. கோபத்தோடு எழுந்து காவலர்களை அழைத்து, அன்னமய்யாவை அழைத்துப்போய் விலங்கிட்டுச் சிறையிலடைக்கப் பணித்தான். நீற்றறையிற் இட்ட போதும் இறைவனையே நினைந்துருகி, 'மாசில் வீணையும் மாலை மதியமும்' என்று இறைவனையே நினைந்து பாடிய அப்பர் சுவாமிகள் போல அன்னமய்யாவும் தன் கைகளில் விலங்கிட்டபோது திருமாலை நினைந்துப் பின்வருமாறு பாடலானார்.

''பசிவந்த போதும்—பெரும்
பயம்வந்த போதும்
இசைவந்த ஹரியே—என்
இன்னுயிர்த் துணைவன்''

என்று பாடிப் பரவசமுற்றார். விலங்குகள் தாமே கழன்று விழுந்தன. சிறைக்காவலர்கள் இந்தக்காட்சியைக் கண்டு அஞ்சி மன்னனிடம் ஓடிச்சென்று சிறையில் நிகழ்ந்த நிகழ்ச்சியை மன்னனுக்குக் கூறினர். மேலும் கோபம் கொண்டான் மன்னன். பகை கண்டு பாய்ந்த சினப்புலி போல சிறைச்சாலை நோக்கி விரைந்தான். தானே தன் கைகளால் விலங்கிட்டான்.

உடனே முன்போல் அவை கழன்று விழுந்தன. மன்னனின் அகந்தை அடங்கியது. அவனுக்கு ஆண்டவன் அருள் விளங்கியது. அடியார் அன்னமய்யாவுக்குத் தான் இழைத்தத் தீங்கினை எண்ணி நடுங்கினான். அவர் திருவடியில் வீழ்ந்து வணங்கினான்; மன்னிப்புக் கேட்டு மயங்கினான். அரசியோடு அவர் திருவடியைக் கழுவித் தண்டமிட்டான். அவரைப் பல்லக்கில் அமர்த்தி ஊர்வலமாகத் தானே தூக்கி வந்தான். அரசனது அடிமைத் திறமும் இளமை தொட்டுத் தன்னோடு அவன் பழகிவந்த நலமும் நினைந்து அவனை அவர் மன்னித்தார். கிருத யுகத்தில் தியானத்திற்கும் திரேதா யுகத்தில் யாகத்திற்கும் துவாபர யுகத்தில் பூசனைக்கும் கிடைக்கும் பயன்களையெல்லாம் இந்தக் கலியுகத்தில் சங்கீர்த்தனங்களுக்கு (பண்ணமைந்த பாடல்களுக்கு)இறைவன் அருள்கிறான்' என்று அவனுக்குப் போதித்து விட்டுத் திருமலைக்கு எழுந்தருளினார். நாளுக்கு ஒரு கீர்த்தனையாகப் பாடிவரலானார். இப்படி அவர் இங்குப் பாடிய கீர்த்தனைகள் முப்பத்து ஈருயிரம் என்பர். இவையெல்லாம் செப்புப் பட்டயத்தில் எழுதிப் பாதுகாக்கப்பட்டன. இப்படி இவர் இங்கு வாழ்ந்த காலத்தில் எழுந்த அற்புதங்கள் பல.

மருலுங்கு அக்ரஹாரத்தின் அருகில் இருந்த மாமரத்தில் ஒருகனியைப் பறித்து ஆண்டவனுக்குப் படைத்துப் பூசனை செய்தார். பின்னர் அக்கனியைப் பிரசாதமாக உண்ணத்துவங்கினார். ஒரே புளிப்பாக இருந்தது. 'அய்யோ இவ்வளவு புளிப்பான பழத்தை இறைவனுக்குப் படைத்தோமே, என்று ஏங்கி வருந்தினார். அன்று தொட்டு அம்மரத்தில் தோன்றும் கனிகள் மிகவும் இனிக்கத் துவங்கின. புளிமா தேமாவாயிற்று.

இன்னொருநாள் மறையவர் ஒருவர் திருமணத்திற்குப் பொருள்வேண்டி அன்னமய்யாவை அடைந்தார். அப்படியே என்று ஆசிர்வதித்து அன்னமய்யா அனுப்பி வைத்தார். அந்த மறையவர் வீடுபோய்ச் சேருவதற்குள் சிற்றரசர் ஒருவர் சீர் வரிசைகளை அவருக்குக் கொடுத்துதவினார்.

இத்தகு அற்புத ஆற்றல் இவர்பால் அமைந்திருத்தலைக் கண்ட மக்கள் புகழ்ந்து போற்றினர். அதனைப் பொறுத அறிஞர் சிலர் வருந்தினர். இப்புகழ்ச்சியையும் பொறுமையை

யும் கண்டு வருந்திய அன்னமய்யா இவையெல்லாம் 'மக்களுக் காகவே எனக்காக அன்று' என்று கூறி இறைவனிடம் முறை யிட்டார். ஒருநாள் பூசைக்குரிய விக்கிரகம் காணுமல் போய் விட்டது. அப்பொழுது 'ஆண்டவனே நான் உன் சொத்து நீ என் சொத்து, அப்படியாளுல் நீ என்னிடம் அல்லவா இருக்க வேண்டும்! எங்குப் போய்விட்டாய்! பூசை செய்யும் வேளை யாயிற்றே' என்று ஏங்கி வேண்டிஞர். என் இந்திராரமணனைக் கொண்டுவந்து கொடுப்போர் இல்லையோ என்று புலம்பிஞர். விக்கிரகம் கிடைத்தது. மகிழ்ந்து பாடல் பல பாடிஞர்.

முன்பு குறித்தது போலப் புரந்தரதாசர் காலம் இவர் வாழ்ந்த காலமே ஆகும். திருமலையில் திருவேங்கட நாதனைச் சேவித்துக்கொண்டு அன்னமய்யா வாழ்ந்து வரும்நாளில் ஒரு முறை புரந்தரதாசர் திருமலைக்கு எழுந்தருளிஞர். இருபெரும் பக்தர்களும் பாடகர்களும் கலந்துரையாடி மகிழ்ந்தனர், கண்ணனைத் துதித்து இன்புற்றனர். இருவரும் சென்று திரு வேங்கட நாதன் முன் நின்று தொழுதனர். புரந்தரதாசருக்கு விட்டல சுவாமியாகவும் அன்னமய்யாவுக்குத் திருமாலாகவும் வேங்கடநாதன் காட்சித் தந்தருளிஞர்.

அதன்பின் சில நாட்கள் தங்கிப் பிரியா விடை கொண்டு புரந்தரதாசர் தம்மூருக்கு எழுந்தருளிஞர். இருவர் பாடல் களிலும் ஒருமித்த கருத்தும் கற்பனையும் ஆங்காங்கு அமைந் திருப்பதற்கு இருவரும் திருமலையில் கலந்து இருந்த இவ் வாழ்வே காரணம் என்பர் அறிஞர் பெருமக்கள்.

தாள்ளபாக்க அன்னமய்யா குடும்பமும் பரம்பரையும் தெலுங்குப் பக்தி இலக்கியத்திற்குச் செய்த தொண்டு பெரிது. தாள்ளபாக்கக் குடும்பத்தையே ஓர் தெலுங்கு இலக்கியச் சங்கம் என்று கூறலாம்.

இந்தத் தாள்ளபாக்கத் தெலுங்கு இலக்கியப் பரம்பரையில் மூலவராக விளங்கும் தாள்ளபாக்க அன்னமாசாரியார் (1424—1503) முன்பு குறிப்பிட்டது போல முப்பத்து ஈராயிரம் (32000) இன்னிசைப் பாடல்களை (கீர்த்தனங்களை) இறைவன் திருவேங்கடநாதன் மீது இயற்றியுள்ளமை அனைவரும் அறிந்

ததே. இன்னும் சில நூல்களும் இவர் இயற்றியுள்ளார். அவை பின் வருமாறு:

1. சிருங்கார சங்கீர்த்தனங்கள்
2. ஆத்யாத்மிக சங்கீர்த்தனங்கள்
3. சிருங்கார மஞ்சரி
4. பனிரண்டு சதகங்கள்
5. இரண்டடி ராமாயணம்
6. வேங்கடாசல மகாத்மியம்
7. சங்கீர்த்தன லட்சணம்

இவரை அன்னமய்யா, அன்னமய்யங்கார், அன்னமய்யா சார்யர், அன்னய்ய குரு, அன்னய்யார்யா, கோனேடி அன்ன மய்யா என்று பல பெயரிட்டுப் போற்றுவர்.

அன்னமய்யா முதல் மனைவியராகிய தாள்ளபாக்க திம்மக்க சுபத்ராபரிணயம் எழுதினர். அவர் மகன் நரசிங்கன்ன (1454—1546) கவிகர்ணரசாயனம் என்னும் நூலை இயற்றினர் என்பர். இவரை நரசய்யங்கார், நரசய்யாசாரியர், நரசிங்கண்ணன், நரசிம்மகுரு என்றெல்லாம் மக்கள் அழைத்துப் போற்றினர்.

அன்னமய்யாவின் இரண்டாம் மனைவியரான அக்காம்பாவுக்குப் பிறந்த மகனுரே பெரிய திருமலைசாரியார் ஆவர். இவர் தம் குடும்பப் பரம்பரைக்குரிய பக்தி நலஞ்சான்ற கவிஞராக இருந்ததோடுகூட வீரராகவும் விளங்கினர். சாளுவ நரசிம்ம ராயருக்குப் படைத்துணைவராகச் சென்று துளுவநரசராயரோடு போராடினர். அப்போரில் துளுவ நரசராயர் இறந்துபோகவே வீரநரசிம்மராயர் அரசர் ஆனர். இவர் பெரிய திருமலாசாரியாரின் பகைவர். அவ்வரசர் அவரைக் கொல்லவும் திட்டமிட்டார். இதனை அன்பர் மூலம் அறிந்த பெரிய திருமலைசாரியார் தாள்ளபாக்கம் விட்டுத் திருப்பதியை வந்தடைந்தார். விஜய நகரத்தை ஆண்ட துளுவ பரம்பரையில் முன்னேடியாக விளங்கிய அச்சுதராயர் தாள்ளபாக்கக் கவிஞர்களைப் பாராட்டிப் போற்றி வந்தார்.

பெரிய திருமலைசாரியார் (1458—1554) தமிழிலும் கவிவல்லவர். இவர் இயற்றிய நூல்கள் பல. சிருங்கார சங்கீர்த்தனம், ஆத்யாத்மிக சங்கீர்த்தனம், வேங்கடேசுவர வசனங்கள், சிருங்கார விருத்த சதகம், வேங்கடேசுவர உதாஹரணம், நீதி சீசசதகம், சுதர்சனரகட, பகவத் கீதை தெலுங்கு

வசனம், இரண்டடி ஹரிவம்சம், சங்கீர்த்தன லட்சண வியாக்யானம், பதிவேங்கடேசுவர சுப்ரபாதம் என்பனவெல்லாம் இவரியற்றிய நூல்களாகும். வைணவப் பெருமக்கள் இவரை பெரிய திருமலேயய்யா, திம்மய்யா, திருமலே திருமலாசார்யா, திருமலே தேசிகர் என்று பல பெயட்டு அன்போடு அழைப்பாராயினர்.

பெரிய திருமலே சாரியாரின் பிள்ளைகளில் முதல்வர் சின்ன திருமலேசாரியார் (1488—1562) அன்னமய்யாவே இவருக்கு உபநயனம் செய்வித்தார். எட்டு மொழியில் இவர் வல்லவர் என்ற பட்டம் இவருக்கு வாய்த்தது. தந்தை பெரிய திருமலே சாரியாரைப் போலவே இவரும் சிருங்காரக் கீர்த்தனைகள் பல பாடினர். இவர் திருமலேத் திருவேங்கடமுடையானுக்குக் கைங்கரியம் பல செய்தார். மங்காபுரத்திலிருக்கும் கல்யாண வேங்கடேசுவரசுவாமி ஆலயத்தைப் புதுப்பித்தார். இவர் இயற்றிய நூல்கள் சிருங்கார சங்கீர்த்தனங்கள், ஆத்யாத்மிக சங்கீர்த்தனங்கள், அஷ்டபாஷா தண்டகம், சங்கீர்த்தன லட்சணம் ஆகியனவாகும். இவருக்குரிய வேறுபெயர் சின்ன திருமலே ஐய்யங்கர், சிறு திருமலே அய்யங்கர், சிறு திருமலேதீட்சிதர், திருமலே வேங்கடேச தீட்சிதர் முதலியனவாகும்.

பெரிய திருமலே சாரியாரின் மகனர் சின்ன திருவேங்கள நாதுடு (1500—1588) இரண்டடி (துவிபத) யாப்புப்பாடலில் பல நூல்கள் இயற்றினர். தன் தாத்தாவாகிய அன்னமய்யாவின் வாழ்க்கை வரலாற்றையும் வரைந்தார். இவர் இயற்றிய நூல்கள் அன்னமாசார்ய சரித்திரம், பரமயோகி விலாசம், அஷ்டமகிஷி கல்யாணம், உஷாபரிணயம் என்பனவாகும். இவரை தாள்ளபாக சின்னண்ணு, திருவேணுதர், திருவேங்கட ஐய்யங்கார், திருவேணுதய்யர் என்றெல்லாம் அன்போடு அழைப்பர்.

தாள்ளபாக்கத் திருவேங்களப்பா (1515—1565) அமருகம், பாலப்ரபோதிகா, சுதாநிதி, இராமச்சந்திரோபாக்கியாணம் என்னும் நூல்களைப் பாடியருளினர். இவரை மக்கள் திருவேங்களப்பர், திருவேங்கட்டய்யன், திருவேங்கள தீட்சிதர் என்றெல்லாம் அழைப்பர்.

அன்னமய்யா தோற்றுவித்த தாள்ளபாக்கப் பரம்பரையினர் ஒவ்வொருவரும் தெலுங்கு இலக்கியத்தில் சிறந்து விளங்கிய வீரசைவ நூல்களுக்கு இணையாக வைணவ சமய நூல் பல இயற்றினர். எனவே இந்தத் தாள்ளபாக்கக் குடும்பத்தைத் தெலுங்கு வைணவ இலக்கியச் சங்கம் என்று போற்றிப் புகழலாம்.

—*—

# 2. அன்னமய்யாவும் திருப்பதியும்

இந்திய மொழிகளில் தமிழிலேயே திருவேங்கடம் பற்றிய குறிப்பு முதன்முதல் காணப் பெறுகின்றது. 'வேங்கட நெடுவரை', 'தேங்கமழ் நெடுவரை வேங்கட வைப்பு', 'தேன் தூங்கும் உயர்வரை வேங்கடம்', 'காம்புடை நெடுவரை வேங் கடம்' என்றெல்லாம் சங்க இலக்கியமும் 'வட வேங்கடம்' என்று தொல் காப்பியமும் குறிப்பிடக் காணலாம். என்ருலும் திருவேங்கடத்தைத் திருவேங்கடநாதனுக்குரிய திருமலை யாகக் கொண்டு வைணவ நோக்கில் தமிழில் பாடத் துவங்கிய காலம் கி. பி. இரண்டாம் நூற்ருண்டே எனலாம். சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள்,

'' வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலயத்து உச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக் கோடியுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையில் ஏந்தி
நலங்கிளர் ஆரம்மார்பில் பூண்டு
பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் ''

ஆகிய திருவேங்கடவன் நின்ற வண்ணத்தை முதன்முதலில் கவி வண்ணம் செய்து காட்டுவார். பின் ஆரும் நூற்ருண்டிலிருந்து ஆழ்வார் பலர் திருவேங்கடநாதனைப் பற்றிப் பாடிய மங்களா சாசனப் பாடல்கள் பல திவ்வியப் பிரபந்தத்தில் இலங்கக் காணலாம்.

ஆனுல் தெலுங்கு இலக்கியத்தில் பதினைந்காம் நூற்ருண் டிற்கு முன்பு திருப்பதி குறித்தோ, திருவேங்கட நாதர் குறித்தோ எந்தச் செய்தியும் காணப் பெறவில்லை என்பர். பதினைந்காம் நூற்ருண்டில் எர்ரந தம் காப்பியம் ஒன்றில்

திருவேங்கட நாதனைப் பற்றிச் சிறு குறிப்பு ஒன்று தந்துள்ளார். சிறப்பாக விஜயநகரப் பேரரசர் காலம் முதற்கொண்டே திருப்பதியின் பெருமை குறித்தும், திருமலையான் சீர்மைகுறித்தும் பாடல்களும் காவியங்களும், தோன்றலாயின. அன்று தொட்டுத் தெலுங்கில் தோன்றிய காவியங்களிலும் பிரபந்தங்களிலும் காவியத்தலைவர்கள் தலயாத்திரையின்போது தவறாமல் திருமலைக்கு வந்து திருமலையானைத் தொழுது சென்றதாகப் பாடுவதைத் தெலுங்குப் புலவர் பெருமக்கள் ஒரு மரபாகக் கொண்டுள்ளதைக் காணலாம்.

என்றாலும் தாள்ளபாக்கக் குடும்பத்தாரைப் போல் திருவேங்கட நாதனுக்கே தங்கள் புலமையை யெல்லாம் காணிக்கையாக வைத்துக் கவி பல பாடிக் காவியம் பல இயற்றிய குடும்பம் வேறு இல்லை எனலாம். இந்தத் திருவேங்கட நாத இலக்கியக் குடும்ப மூலவராகிய அன்னமய்யா திருப்பதி யானையும் திருமலைத் தோற்றத்தினையும், திருவேங்கடவன் ஏற்றத்தினையும் குறித்து எண்ணற்ற இன்னிசைப் பாடல்கள் இயற்றியுள்ளார். அத்தகு கீர்த்தனங்களில் ஒரு சில கற்றால், அன்னமய்யாவின் உள்ளக்கிடக்கையும் ஓங்கிய புலமையும் கற்பனைத்திறமும் கவிவளமும் நமக்குப் புலப்படும்.

திருவேங்கட மலையின் தோற்றத்தையும் சிறப்பையும் கீர்த்தனை ஒன்றில் பின் வருமாறு பாடுகின்றார்.

அதிவோ அல்லதிவோ ஹரிவாசமு
பதிவேல சேஷுல படகலமயமு
அதெ வேங்கடாசல மகிலோந்நதமு
அதிவோ பிரஹ்மாதுல கபுரூபமு
அதிவோ நித்ய நிவாச மகிலமுனுலகு
அதெ சூடுடதெ ம்ரொக்கு டானந்த மயமு
செங்கட நல்லதிவோ சேஷா சலமு
நிங்கிநுன்ன தேவதல நிஜவாசமு
முங்கிட நல்லதிவோ மூலநுன்னதனமு
பங்காரு சிகுரால பஹுப்ரஹம மயமு
கைவல்ய பதமு வேங்கடநக மதிவோ
ஶ்ரீ வேங்கடபதிகி சிருலயினதி

**பாவிம்ப சகல சம்பதல ரூபமதிவோ**
**பாவன முலகெல்ல பாவன மயமு**

**பொருள் :**

*1. அதோ! அந்தோ தெரிகிறதே அரிவாசம். ஆயிரந்தலை யுடைய ஆதிசேடன் படம் விரித்து நிமிர்ந்தாற் போலே தெரி கிறதே! அந்தக் குன்றுகள்தான் திருவேங்கடநாதன் கோயில் கொண்டுள்ள திருமலையாகும்.*

*2. அதுவே வேங்கடாசலம்! அதோ தெரிகிறதே அதுதான் பிரமாதி தேவர்களும் காண்பதற்கு அரிய திருவேங்கடம். அது தான் அகில முனிவர் அனைவருக்கும் நிலையான வாழிடம்- அதைக் காணுங்கள்! வணங்குங்கள்! பேரின்பப் பெட்டக மல்லவோ அது!*

*3. இதோ நெருங்கி வந்து விட்டது சேஷாசலம். விண் ணகத் தேவர்களுக்கு உண்மையான நிலையம் அதுவே. மூல தனமெல்லாம் குவிந்து ஒன்ருய்த் திரண்டு முன் நிற்பதைக் காணுங்கள்! பொன் வண்ண சிகரங்கள் பிரம மயம்.*

4. **வீட்டினை அளிக்கும் வேங்கடம் அதுவே!**
**வேங்கட நாதனின் திருவெலாம் அதுவே!**
**நாட்டு வளத்தின் நல்லுரு அதுவே!**
**நல்லன வற்றுள் நல்லதும் அதுவே!**

*நினைவிலும் கனவிலும் எப்போதும் அன்னமய்யா திரு வேங்கடநாதனைக் கண்டு களித்துக் கவி பல பாடி வரலானுர். ஒரு நாள் இரவு திருவேங்கட நாதனை நினைந்தவாறு உறங்க லானுர். அந்த உறக்கத்தில் தெய்வீகக் கனு ஒன்று கண்டார். திருமலை கோவில் தோன்றியது. திருவேங்கட நாதன் காட்சி தந்தார். அது பின் வரும் கீர்த்தனையாக உருவாயிற்று.*

**இப்புடிடு கலகண்டி—எல்லலோக மூலகு**
**அப்படகு திருவேங்க டாத்ரீசு கண்டி**
**அதிசமயம்பைன சேஷாத்ரி சிகரமுகண்டி**
**பிரதீலேனி கோபுர ப்ரபலுகண்டி**
**சதகோடி சூர்ய தேஜமுலு வெலுகக கண்டி**
**சதுராஸ்யு பொடகண்டி சய்யென மேலுகண்டி**

கனகரத்ன கவாட காந்து லிருகட கண்டி
கனமைன தீப சங்கமுலு கண்டி
அனுபம மணிமயம்மகு கிரீடமு கண்டி
கனகாம்பரமு கண்டி கிரக்குன மேல்கண்டி
அருதைன சங்க்க சக்ராது லிருகட கண்டி
சரிலேனி அபய ஹஸ்தமு கண்டு
திருவேங்கடா சலாதிபுனி சூடக கண்டி
ஹரிகண்டி குருகண்டி அந்தடமேல் கண்டி

*1. இதோ இப்போது ஒரு கனவு கண்டேன். எல்லா உலக அப்பனும் திருவேங்கட மலையப்பனைக் கண்டேன்.*

*2. வானளாவிய சேஷாத்திரி சிகரம் கண்டேன். ஈடற்ற கோபுரப் பேரொளிப் பிழம்பு கண்டேன். நூறு கோடி சூரியச் சுடரொளி சூழக் கண்டேன். நான்முகத் தேவன் பிரமன் அங்கு நெருங்கிவரக் கண்டேன். உடனே எழுந்தேன்.*

*3. அதன் பிறகு இரத்தினம் பதித்த தங்கக் கதவுகள் இரு புறம் இலங்கக் கண்டேன். பெரும் பெரும் குத்து விளக்குக் கூட்டம் கண்டேன். ஒப்பற்ற மணி மகுடம் ஒளிரக் கண்டேன். தங்கமயமான பீதாம்பரம் தரித்திருக்கக் கண்டேன். உடனே எழுந்தேன்.*

*4. அருமையான சங்கு சக்கரம் இருபுறமும் அமைந்து விளங்கக் கண்டேன். (அடியவர்க்கு அருளியதால்) அளவற்ற புகழ் படைத்த அபயக்கரம் கண்டேன். திருவேங்கட மலையானின் காட்சி கண்டேன். ஹரி கண்டேன். குரு கண்டேன். உடனே எழுந்தேன்.*

*மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றை முறையாகக் கண்டு சேவித்த அடியார்கள் கருதியன எல்லாம் பெறுவர். இந்தச் சமய நம்பிக்கையை மனதில் கொண்டு பின்வரும் பொருள் கொண்ட பாடல் ஒன்றை அன்னமய்யா பாடியுள்ளார்.*

*1. எவர் சேவிக்கிறரோ எவ்வளவு சேவிக்கிறரோ அவர் அவ்வளவு பேறுகளைப் பெறுவர். வாரீர் விரைந்து; வாரீர் விரைந்து; வாரீர் வல் விரைந்து. காத்தருளும் திருமால் ஈங்கே காத்துக் கொண்டிருக்கிறன். கருட கம்பத்துக்கு அருகே*

உயிரையும் பொருட்படுத்தாமல் கடுந்தவம் செய்வோர்க்குத் திருஉறை மார்பன் வேண்டும் வரம் அருள்கிறான். கோனேரி அருகில் வந்த யாத்திரிகர் அனைவருக்கும் தீர்த்த பலன் தந்து அருள்கிறான் அப்பரமன்.

2. இதோ சேனை முதலி! (விஷ்வக் சேனர்). இவரைக் காணுங்கள். கண்டார் மனத் தூய்மை பெறுவர்; மெஞ்ஞானம் உறுவர். பொன் காசுகளையும் அணி மணிகளையும் உண்டியில் செலுத்தும் போது பரந்து எங்கும் கரந்துள்ள திருவேங்கடமுடையான் திருமேனி தெரிந்தும் தெரியாமலும் தோன்றும் திருவருளை நோக்குங்கள்.

3. கருவறை சன்னிதியில் காத்திருந்து அடியவர் இடும் முறையீடுகளை எல்லாம் பரிவோடு கேட்பான்; தரும் விண்ணப்பங்களை எல்லாம் வினயத்தோடு ஏற்பன் திருவேங்கடவன். எந்தத் துன்பம் ஆயினும் அது தீர தன் திருவடி காட்டி இம்மையும் மறுமையும் இன்புடன் அருளி அந்த அலர்மேல் மங்கை உறைமார்பன் அழியாப் பெரும் புகழைத் தனக்கே ஆக்கிக்கொள்வான்.

திருவேங்கடத் திருமலையை ஆழ்வார் பலர் பாடித் தமிழில் அனுபவித்துள்ளனர். அவர்களுள் குலசேகரப் பெருமாள் அருளிய 'ஊனேறு' என்னும் பதிகப் பாடல் உணர்வுகளோடு ஒத்து அன்னமய்யா ஒரு கீர்த்தனை பாடியுள்ளார்.

குலசேகரர் திருவேங்கடமுடையான்பால் வைத்த பேரன்பினால்,

> 'கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே';
> 'திருவேங்கடச் சுனையில் மீனாய்ப் பிறப்பேனே';
> 'வேங்கடக்கோன் தான்உமிழும் பொன்வட்டில்
> பிடித்துடனே புகப்பெறுவேன் ஆவேனே';
> 'வேங்கடத்துச் செண்பகமாய் நிற்கும் திருவுடையேன் ஆவேனே';
> 'வேங்கட மலைமேல் தம்பமாய் நிற்கும் தவம்
> உடையேன் ஆவேனே.;
> 'வேங்கடத்துள் அன்னனைய பொற்குவடாம்
> அருந்தவத்தோன் ஆவேனே';
> 'திருவேங்கட மலைமேல் கானாறாய்ப் பாயும்
> கருத்துடையேன் ஆவேனே';
> 'திருவேங்கட மலைமேல் நெறியாய்க் கிடக்கும்
> நிலையுடையேன் ஆவேனே';

**'வேங்கடவா! நின் கோயிலின் வாசல் படியாய்க் கிடந்து உன் பவளவாய்க் காண்பேனே'.**

**'எம் பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே.'**

என்றெல்லாம் பாடிப் பரவுகிறார்.

குலசேகரப் பெருமாளுக்குப் பின் தோன்றிய அன்னமய்யா அவரைத் தொடர்ந்து அந்தப் பதிகத்துக்கு ஒரு முடியுரை அளித்தாற் போலே தன் கீர்த்தனை ஒன்றில் பின்வருவன வற்றைக் குறிப்பிடுகின்றார்.

'மறைகள் எல்லாம் இங்கு மலைகள் ஆயின; அரிய புண்ணியம் எல்லாம் திரண்டு அருவிகள் ஆயின. தேவாதிதேவர்கள் அனைவரும் இங்குத் திரியும் விலங்குகளாயினர்; மாமுனிவர்கள் இங்கு நிற்கும் மரங்களாயினர், இங்குத்தான் திருவேங்கடவன் கோயில் கொண்டு வேண்டியோர்க்கு வேண்டும் வரங்கள் எல்லாம் வழங்குகின்றான்.'

திருமலைமீது 'ரங்க மண்டபம்' என்ற பெயரில் மண்டபம் ஒன்று விளங்குவதை அங்குச் சென்றோர் கண்டிருப்பர். அது ஒரு பெரிய சமய வரலாற்று நினைவை நமக்கு ஊட்ட வல்லது. ஆயிரத்து முந்நூற்றுப் பத்து முதல் ஆயிரத்து முந்நூற்று இருபதுக்கு இடையில் மாலிக்காபூர் என்னும் முகலாயப் படைத் தலைவன் தென்னகத்தின்மீது படையெடுத்து வந்த போது திருவரங்க நாதரை (உத்சவர்) வைணவச் சான்றோர் பலர் கொணர்ந்து இங்கு வைத்துப் பாதுகாத்தனர்; பின்னர் மீண்டும் திருமலையிலிருந்து திருவரங்கத்துக்கு எழுந்தருளச் செய்தனர். இதனால் இந்த மண்டபம் 'ரங்க மண்டபம்' என்ற பெயரில் இப்பொழுது வழங்கி வருகிறது.

இந்த 'ரங்க மண்டபத்தை' கண்டபோது அன்னமய்யா நெஞ்சில் அரங்கன்பால் அன்பும், அரங்கநாயகிபால் பரிவும் எழுந்தன. 'திருவரங்கா! காவிரி தீரத்தில் திருமகள் துடைமீதி காலூன்றிக் கிடந்த நீ இங்குத் தனியே வந்து பிரிவுத் துயரால் வருந்தியவாறு தங்கியுள்ளாயே!'' என்று உருக்கத்தோடு ஒரு கீர்த்தனை பாடியுள்ளார்.

இவ்வாறு திருமலை, திருப்பதி, ஆழ்வார் தீர்த்தம் முதலிய இடங்களையும், அங்கங்கு எழுந்துள்ள கோயில்களையும், அவற்றுள் எல்லாம் குடிகொண்டுள்ள திருமாலையும் அங்கங்கு அவர்க்கு எடுக்கப் பெறும் திருவிழாக்களையும் பற்றி எண்ணற்ற இசைப் பாடல்கள் தாள்ளபாக்க அன்னமய்யா இயற்றியுள்ளார்கள்.

—*—

# 3. அன்னமய்யாவும் ஆழ்வார்களும்

பாரத தேசம் பல சமயக் கொள்கைகள் தோன்றி வளர்ந்த தாயகமாகும். வேதங்களும், உலகமெல்லாம் அன்று மின்றும் ஒப்புக் கொள்ளுமாறு பரஞானம் வழங்கிய உபநிடதங்களும் இந்த மண்ணில் தோன்றி மலர்ந்து தெய்வமனம் கமழ்வனவே. ஆத்திக, நாத்திக தரிசனங்களும் அவரவர்க்கு ஏற்றவாறு அரும்பெரும் தத்துவங்களைக் கதைப் போக்கில் வைத்துக் காட்டிய இதிகாசங்களும் பிறந்தது இந்த மண்ணிலேயே. சமணமும், பௌத்தமும் தோன்றித் துறவை வற்புறுத்தி மண்ணுலக வாழ்வை மறுத்ததும் இந்த மண்ணில்தான். அதற்கு மாறாக 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் விண்ணக வாழ்விற்கும் அது தடை இல்லை' என்றும் 'இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்' என்றும் 'மனித்த பிறவியும் வேண்டுவனே இந்த மாநிலத்தே' என்றும் மண்ணுலக வாழ்வை வற்புறுத்தி விண்ணக வாழ்வுக்கு வழி கோரிய பக்தி இயக்கப் பெரு வெள்ளம் பெருக்கெடுத்துப் பாரெல்லாம் தெய்வப் பயிர் வளர்த்ததும் இங்கேயே.

இத்தகு பக்தி இயக்கம் தமிழ் மண்ணில் முதன்முதல் தோன்றி ஆற்றலோடு வளர்ந்தது. தேவாரம், திவ்வியப் பிரபந்தம் முதலான பக்தி இயக்கப் பாடல்கள் தோன்றியது இந்தத் தமிழ் மண்ணிலேயே. வேதம், வேதாந்தம், பிரமசூத்திரம், பகவத்கீதை, சமண பௌத்த சமயங்களெல்லாம் எந்த நாட்டுக்கும் பொதுவாயினும் வைணவமும், சைவமும் சிறப்பாகத் தமிழ் நாட்டிற்கே உரிய சமயங்களாகும்.

வைணவ தத்துவக் கோட்பாட்டுக்கு அடிப்படை வகுத்துத் தந்த விசிஷ்டாத்வைத சிந்தனைகளைத் தந்தவர் இராமாநுசர் ஆவர். அப்படி அவர் சங்கராத்வைதத்தை மறுத்து விசிஷ்டாத்வைதத்தை நிலைநிறுத்த அவருக்கு வழிகாட்டிய நூல் திவ்விய பிரபந்தமே ஆகும்.

தமிழில் வைணவ சமயப்பாடல்கள், சங்க இலக்கிய எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடலில் சிறப்பாக அமைந்திருக்கக் காணலாம். திவ்விய பிரபந்தத்திற்குப் பின்

னும் எண்ணற்ற வைணவ தத்துவ இலக்கிய நூல்கள் பல தோன்றின. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அஷ்ட பிரபந்தமும், பிள்ளை உலக ஆசிரியர். வேதாந்த தேசிகர் முதலியோர் இயற்றிய விசிஷ்டாத்வைத தத்துவ நூல்களும் தலை சிறந்தவையாகும். என்றாலும் ஆழ்வாரின் அருளிச் செயல்கள் அடங்கிய நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்கு அவையெல்லாம் ஈடாகமாட்டா.

வைணவ சமயத்தை காவிரிதொட்டுக் கங்கை வரை நிறுவிய எம்பெருமானார் இராமாநுசர். வைணவ தலங்களாகிய நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் இத்திவ்விய பிரபந்தத்தைத் திருமால் சன்னதி முன் திருமந்திரமாக ஓதும் முறை வகுத்ததிலிருந்தும், இன்றும் வைணவ சமயம் வழங்குகின்ற இடம் எங்கும் இத்திவ்வியப்பிரபந்தம் ஓதப்பெறுவதிலிருந்தும் இதன் சிறப்பை நன்கு உணரலாம். அத்தகு ஆழ்வார்களின் அருளிச் செயல்களாகிய இந்த நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் சிறப்பாக பகவத் விஷயம் என்று பாகவதர்களால் போற்றப்பெறும் திருவாய் மொழியினை அருளிச்செய்த நம்மாழ்வார் பாசுரங்களிடத்தும் தாள்ளப்பாக்க அன்னமய்யாவுக்கு ஈடுபாடு பெரிதும் இருந்திருத்தல் வேண்டும் என்பது இருவர்தம் பாடல்களையும் ஒப்பிட்டுக் காண்போர் உணர்வர்.

'வேதம் தமிழ் செய்த வித்தகன்' என்று போற்றுமாறு வேத வேதாந்த உண்மைகளையெல்லாம் நம்மாழ்வார் தமிழில் தந்தது போல தாள்ளபாக்க அன்னமய்யாவும் வடமொழியில் வாழ்ந்து வந்த வேதாந்த நுண்பொருளை எல்லாம் பாமரனுக்கும் விளங்குகின்ற வழக்குத் தெலுங்கில் பாடி அக்குறை போக்கி நிறைவு செய்துள்ளார். ஆசாரியராகியும், ஆழ்வாராகவும் வைணவ சமயத்தை வளர்த்த முதல்வரான நம்மாழ்வார் விஷ்ணுவின் கௌஸ்துப அம்சமாகப் பிறந்த பெரியார். அப்படியே அன்னமய்யாவும் திருமால் கைக்கொண்ட வாளின் அம்சமாக அவதரித்தார். இந்த இருபெரு வைணவப் பெரியோர்களும் வைகாசித் திங்கள் விசாகநாளில் பிறந்ததும் நம் சிந்தனைக்குரியது. இப்படியே இருவரும் பதினாறு வயதில் தெய்வத் திருக்காட்சி பெற்று திவ்வியத் திருப்பாடல்கள்

பாடத்துவங்கினார்கள் என்பதும் நோக்கத்தக்கது. நூற்று எட்டுத் திருப்பதிகளுள் பல திருக்கோவில்களைப் பாடித் திரு வேங்கடத்தைப் பல பாடல்களால் சிறப்பித்த நம்மாழ்வார் போலவே அன்னமய்யாவும் திருமால் குடிகொண்டு திகழும் இருத்தலங்கள் பலவற்றைப் பாடித் திருவேங்கடத்தைச் சிறப் பாகத் தம் பல்லாயிரம் பாடல்களில் குறிப்பித்தார் என்ப தும் இங்குக் கருதத்தக்கது. நம்மாழ்வார், நெஞ்சையும் வண் டையும், கிளியையும் விளித்துப் பாடுவதுபோல அன்னமய்யா வும் அவற்றை வர்ணித்துப் பாடுகின்ற கீர்த்தனைகள் பல உள்ளன. இவ்வாறு நம்மாழ்வார்க்கும் அன்னமய்யாவுக்கும் பிறப்பிலும் பெருமான் அருள் பெற்ற நிலையிலும் பாசுரம் பல பாடிய வகையிலும் ஒற்றுமை இருப்பது போலவே அவ்விரு வர் தம் பக்திப் பாடல்கள் பலவற்றின் இடையேயும் உணர் வும் கருத்தும் ஒத்திருக்கக் காணலாம்.

நம்மாழ்வாரோடு இப்படிப் பல தன்மைகளால் ஒத்து விளங்குகின்ற அன்னமய்யா ஒரு வகையில் பெரியாழ்வா ரோடும் ஒப்பிட்டுக் காண்பதற்கு உரியவராகிறார். 'மானிட வர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்ற சூடிக் கொடுத்த சுடர்க்கொடியை பூஞ்சோலை ஒன்றில் கண்டு எடுத்து வளர்த்து திருவரங்கனுக்கு அளித்த பெரியாழ்வாரைப் போலவே அன்னமய்யாவும், செந்தாமரைப் பொய்கையில் தோன்றிய மங்காம்பாளினைத் திருவேங்கடமுடையானுக்குத் தந்து மாமன் ஆகிறார்.

மேலும் பெரியாழ்வார் திருமால்பால் கொண்ட தாயன்பு நம்மாழ்வார் கொண்ட காதலன்பும் ஒருங்கிணைந்து அன்னமய்யா பாடல்களில் ஒளிர்வதையும் காணலாம். ஆனால் அன்னார் பாடல்களுக்கு எழுந்த வியாக்யானங்கள் போல அன்னமய்யா பாடல்களுக்கு விளக்கம் ஒன்றும் இன்று வெளிவரவில்லை; வெளிவர வேண்டும்.

அன்னமய்யா திவ்வியப் பிரபந்தத்தின் பாற்கொண்ட ஈடு பாடு பின்வரும் கீர்த்தனைகளில் விளங்கக்காணலாம். திருவாய் மொழி மூன்றும் பத்தில் 'ஒழிவில் காலமெல்லாம்' என்று தொடங்கும் மூன்றும் பதிகம் திருவேங்கடத்தானையும், திரு

மலையையும் பற்றிய பத்துப் பக்திப் பாடல்களைக் கொண்டு விளங்குவதாகும். ''எங்கள் தந்தைதந்தைக் கெல்லாம் முன்னேனைச் சோதித் திருவுருவாய் ஓம் எனும் பிரணவத்தை ஓதும் அருவி சூழ் திருவேங்கட முடையானுக்கு ஒழிவில் காலமெல்லாம் வழுவிலா அடிமை செய்ய வேண்டும். அத்திருவேங்கட நாதன் வானவர்களும் தேவேந்திரனும் தொழுது வணங்கத் தக்கவாறு எல்லையற்ற புகழோடு மேகவண்ணனாய் அத்திருமலையில் நின்றுள்ளான். தெள்ளிய சுனை பல சூழும் திருவேங்கடத்து வானவர் தலைவனாய் அளவிலாப் புகழோடு திகழும் திரு வேங்கடவனே அன்று மாயோனாய்த் தோன்றியவன்; செந்தாமரைக் கண்ணன்; செவ்விய இதழோடு விளங்கும் கருமாணிக்கக்கட்டி. தேவர்களுக்கெல்லாம் தலைவன் என்று திருவேங்கடத்தானைப் புகழ்வதில் அவனுக்கு என்ன பெருமை. நீசனாகிய என்பால் கூட பாசம் வைத்த அப்பரஞ்சோதியின் எளிவந்த தன்மை அல்லவோ உண்மையில் அவனுக்குப் பெருமை தருவதாகும்'' என்று திருவேங்கடத்தானையும், திருமலையையும் ஆழ்வார் இப்பதிகத்தில் பாடிப்பரவியது போலவே அன்னமய்யாவும் பாடியருளிய பாக்களை '**அன்னமய்யாவும் திருப்பதியும்**' என்ற பகுதியிற் கண்டோம்.

நாரயணனளித்த இந்த நாவினைக்கொண்டு நாராயணனை மட்டுமே பாடுவேன் என்ற கருத்து அமைந்த பல பாடல்கள் அன்னமய்யா கீர்த்தனைகளில்காணப்படுகின்றன. இந்தக்கருத்து 'சொன்னால் விரோதமானது' என்ற திருவாய்மொழிப் பதிகத்தோடு ஒப்பிட்டு மகிழக் தக்கது. அன்னமய்யாவுக்குச் சொந்த அனுபவத்தில் சாளுவ நரசிம்மராயரைப் பாட மறுத்து எழுந்த இந்த உணர்வு நம்மாழ்வார்பால் இயல்பாக உலக உயிர்கள் உய்யும் பொருட்டு எழுந்தது என்பது இங்கு நோக்கத்தக்கது. அப்புத்தகத்தில் உள்ள ஆழ்வார் பாடல் ஒன்று இங்குக் குறிக்கத் தக்கது.

**வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேனல்லேன்**
**ஆய் கொண்ட சீர்வள்ளல் ஆழிப்பிரானெனக் கேயுளன்**
**சாய் கொண்ட இம்மையும் சாதித்து வானவர் நாட்டையும்**
**நீகண்டு கொள் என்று வீடும் தரும்நின்று நின்றே.** (3.9.9)

இழிந்த சாதியினராயினும் திருமாலுக்கு அவர் அடியவராயின் அவரே சிறந்தவராவர் என்ற கருத்து 'கொஞ்செமுனு கனமுனு கொனநேலா' என்ற பாடலில் அன்னமய்யா கூறுகின்ருர். (11-3-117) இப்பாடல் பின்வரும் நம்மாழ்வார் பாடலோடு ஒருங்கு வைத்து உணரத் தக்கது.

**குலந் தாங்கும் சாதிகள் நாலிலும் கீழிழிந்து எத்தனை**
**நலந்தா னிலாதசண் டாளசண் டாளர்க ளாகினும்**
**வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற் காளரென்றுள்**
**கலந்தார் அடியார் தம்மடி யாரெம் அடிகளே.**

அன்னமய்யாவின் பாடல் ஒன்றில் (8—23) 'வெங்கடேசா, உன் அடியவர் அடியவர் அடியவர்க்கு யான் அடியேன்' என்ற தாசனும் தன்மை பின்வரும் நம்மாழ்வார் பாடலில் அமையக் கண்டு மகிழலாம்.

**அடியார்ந்த வையமுண் டாலிலை யன்னவ சஞ்செய்யும்**
**படியாது மில்குழ விப்படி யெந்தைபி ரான்தனக்கு**
**அடியார் அடியார் தம்அடி யார்அடி யார்தமக்**
**கடியார் அடியார் தம்அடி யாரடி யோங்களே. (3.7.10)**

இறைவனுக்கு அடிமை பூண்ட உயிரும் அவனளித்த இந்த உடலும் அவனுக்கே உடைமையும் உரிமையும் ஆவன. இவற்ருல் அவனை வணங்க வேண்டும். அவனுக்குரிய செயல்களையே செய்தல் வேண்டும். அவனோடு தொடர்பில்லாத செயலும். அவன் நினைவில்லா வாழ்வும் பாழ் என்று அன்னமய்யா கூறும் உண்மை 'ஏராளும் இறையோனும்' என்னும் திருவாய்மொழி பதிகத்தோடு ஒத்திருக்கக்காணலாம். அதுபற்றிய அன்னமய்யா பாடல் ஒன்றின் பொருள் இது :— எண்ணிப் பாருங்கள் பெரியோர்களே! காக்கும் கடவுள் திருமாலே. அவன் திருவடியில் அடைக்கலம் புகுதலே எல்லா நன்மைகளையும் அருளவல்லதாகும். அவனுக்குப் பணி செய்யா வாழ்வு காட்டில் எரிக்கும் நிலவாய்ப் பயனற்றுப் போகும். அச்சுதனுடைய கதை கேளாத வாழ்வு குளிக்கப் போயும் சேற்றைப் பூசிக்கொண்ட யானை கதையாகும். பரமனை நினையாத மானிட முயற்சிகள் எல்லாம் பாதாளத்தில் யாருமறியாமல் மறைந்து கிடக்கும் புதையல்

போல் பயன் தராது. ஆண்டவனுகிய அப்பரந்தாமனுக்குச் சேவை செய்யாத மானிடம் கணவன் பிரிந்தபோது மனைவி அலங்கரித்துக் கொண்டாற்போல் வீணுகும்.

சங்ககாலத்தில் மன்னனைத் துயில்எழுப்பும் பாடகர்கள் இருந்ததாகத் தெரிகிறது. அத்தகு பாடகர்கள் உலகெங்கினும் இருந்திருக்கக் கூடும். ஆனுல் பக்தி இயக்கம் தோன்றி பரமனுக்கு முதலிடம் கொடுக்கும் பான்மை வளர்ந்த பின் மன்னனைத்துயில் எழுப்புவதற்குப் பதில் கண்ணனைத் துயில் எழுப்பும் பாடல் மரபு தமிழிலேயே தோன்றிற்று. தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பள்ளி எழுச்சியும், ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையும் இம்மரபினைத் தமிழ் இலக்கியத்திற்குத் தந்த திவ்வியப் பிரபந்த பாடல்களாகும். இவை போன்று திருவேங்கடவன் திருப்பள்ளி எழுச்சி பாடல் பல கீர்த்தனை வடிவில் அன்னமய்யா பாடி யருளியுள்ளார்.

ஆழ்வார் பாடல் பலவற்றில் அமைந்துள்ள உணர்வும் கருத்தும் இப்படி அன்னமய்யா கீர்த்தனைகளிலும் அமைந்து விளங்குதல் ஒருவாறு காட்டப் பெற்றது. ஆழ்வார் ஒருவர் இருவர் உடையன மட்டுமன்றி அனைவருடைய பாசுரங்களும் அன்னமய்யா கீர்த்தனங்களோடு ஒப்பிட்டு ஆய்தல் திருவேங்கடவன் தெய்வத் திருப்பணியில் ஒன்ருகும்.

—*—

# 4. அன்னமய்யா பாடல்களின் அருமையும் பெருமையும்

தனிப் பாடல்கள், தொடர்நிலைச் செய்யுள்கள் முதலியன பற்றித் தொல்காப்பியத்தில் செய்திகள் உள்ளன. ஆனால் பழைய இலக்கியமாகத் தமிழில் கிடைத்துள்ளவை தனித் தனிப் பாடல்களே. இவை காதல், வீரம் பற்றிய பாடல்கள். இவற்றைப் பாடியோர் பலர்; பல காலத்தவர். அவை அழிந்து போகாமல் தொகுக்கப் பெற்றன. இந்தத் தொகுப்புப் பணியாலேயே திராவிட மொழிகளில் தமிழ் இலக்கியம் மிகப் பழமையானதாகக் கருதப் பெறுகின்றது. இப்படி வாய்மொழிப் பாடல்களை எழுதி வைத்துத் தொகுத்துக் காக்காது போனதாலேயே தெலுங்கில் நன்னயபட்டுக்கு முன்னர் தெலுங்கு இலங்கியம் இல்லை என்ற சொல் ஏற்பட்டு விட்டது. மேலும் வாய்மொழிப் பாடல்களையும், காதல் வீரம் பற்றிய தனிப் பாடல்களையும் தெலுங்கு மொழி அறிஞர்கள் போற்றாமல் போனதும் வேறொரு காரணம் எனலாம்.

இப்படித் தனிப் பாடல்கள் இந்தத் தேசத்தில் பாதுகாப்பு இல்லாமல், போற்றுவார் இல்லாமல் இருந்த குறையை நீக்குவது போல தாள்ளபாக்க பரம்பரையினர் திருவேங்கடவன் பற்றி அன்னமய்ய பாடிய பாடலைப் பாடிப் பெருமை செய்தும் செப்புப் பட்டயங்களில் எழுதியும் பாதுகாத்தனர். முப்பத்திரண்டு ஆயிரம் பக்தி கீர்த்தனைகள் பாடியருளிய அன்னமய்ய ''திருவேங்கடவா இந்த ஆயிரக் கண்க்கான பாடல்களில் உன் பாராட்டுக்கு உரியதாக ஒரு கீர்த்தனை இருந்தால் அதுவே போதும். மீதி எல்லாம் சேமிப்புக்கிடங்கில் இருந்து போகட்டும்'' என்கிறார்.

அன்னமய்யாவின் கீர்த்தனைகளை இருவகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று ஆத்யாத்மீக கீர்த்தனைகள்; மற்றது சிருங்காரக் கீர்த்தனைகள்.

அன்னமய்யா வைணவர். அதனால் அவர் பக்திக்கு முதன்மை தந்து பாடியுள்ளார். திருமாலின் எல்லையற்ற

கல்யாண குணங்களையும், ஈடற்ற எழிலையும் திருமால் அடியவர்பால் கொண்டுள்ள ஈடுபாட்டையும் நெஞ்சுருக நினைந்து நினைந்து பாடினார்.

பக்தி, பத்துவகை என்பர். சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், அர்ச்சனம், பாதசேவை, வந்தனம், தியானம், தோழமை, ஆத்மநிவேதனம் ஆகியன அவை.

இவற்றோடு அன்னமய்யா இன்னும் சில பக்திவகைகளைக் கூறியுள்ளார். அரிக்காக விவாதிப்பது பயித்திய பக்தி பிறரைச் சேவிக்காமல் இருப்பது பத்தினி பக்தி; பரமாத்மனை அறிவது விஞ்ஞான பக்தி; மனதில் எண்ணி எண்ணி உருகி உருகி மயங்குவது ஆனந்த பக்தி. சாகசங்களுடன் கூடிய பக்தி அரக்க பக்தி; ஆண்டவனின் அடியார்களைச் சேவிப்பது மோட்ச பக்தி; ஒன்றையே பற்றி நின்று அதனையே செய்து வருவது தாமச பக்தி; 'அவனே எனக்கு அடைக்கலம்' என்று இருப்பது வைராக்கிய பக்தி. திருவேங்கடமுடையானைத் தொழுது பிறவிப் பிணி அறுத்தல் உண்மை பக்தி. T 4764

திருமால் பர, வியூக, விபவ, அந்தர்யாமித்துவ, அர்ச்ச ஆகிய ஐந்து நிலைகளில் உள்ளான் என்பது விசிஷ்டாத்துவித கொள்கையாகும். அன்னமய்யா அந்தக் கொள்கைவழி வாழ்ந்த வைணவர் ஆனமையின் அவர் பாடல்களில் அந்த நிலைகள் எல்லாம் தெளிவாக காணப் பெறுகின்றன. திருமாலின் பஞ்சாயுதங்களையும், அவற்றுள் சுதர்சன சக்கரத்தையும் வைணவர் போற்றி வணங்குவர்; அந்த இயல்பும் அன்னமய்யாவிடம் அமைந்துள்ளது என்னும் உண்மை அவர் கீர்த்தனங்கள் மூலம் அறியக் கூடியது. 'வெய்யிலாயினும் சரி நிழலாயினும் சரி ஏழுமலையானே என் தெய்வம்' என்ற மன உறுதிப்பாடு கொண்டார் அன்னமய்யா!

சுவைகளுள் உவகை தலைசிறந்தது ஆகும். ரசங்களுள் சிருங்காரம் ரச ராஜம்' என்று வடமொழிச் சான்றோர் பாராட்டிப் பேசுவர். சிருங்காரம் இன்றேல் பிரபஞ்சம் இல்லை. இது கூடல், பிரிதல் என்னும் இருவகையாகப் பாடலில் இடம்பெறும். கூடலைவிட பிரிதல் பற்றிய பாடல்களே இனிமை மிக்கன.

அலர்மேல் மங்கை திருவேங்கடத்தான் நித்திய காதலர்கள். அவர்கள் இணைந்திருப்பதே பிரபஞ்ச தோற்றத்திற்கும் வாழ்வுக்கும் அடிப்படை. அந்த இணைவு தூய்மையானது; களங்க மற்றது. இறைவனைப் பிரிந்து வருந்தும் உலக உயிர்கள் எல்லாம் மீண்டும் அவனோடு கூடி மகிழ விழைவதுவே சிருங்கார சங்கீர்த்தனங்களின் இயல்பு. வடமொழிக் கவிஞர் ஜெயதேவன் கீத கோவிந்தத்தில் இந்த நெறியைப் பின்பற்றி 'அஷ்டபதி' என்னும் இசைப் பாடல்கள் பாடியுள்ளார். இவ்வாறே ஆழ்வார்களும் தேவாரச் சான்றோர்களும் அகப்பொருள் நெறியில் தெய்வக் காதல் பாசுரம் பல பாடியுள்ளனர். அன்னமய்யா கீர்த்தனைகளிலும் இத்தகு அகப்பொருள் அமைப்புடைய உருக்கமான பாடல் பல காணப்பெறுகின்றன.

இந்த மண்ணில் பெண்ணாலேயே ஆண்கள் பெருமை உறுகின்றனர். வாயில் கடவாது வீட்டினுள் இருந்து தாயாய், மனைவியாய், மகளாய் அகத்தில் பெண்கள் செய்யும் தொண்டால் ஆண்கள் புற உலகில் பெருமை பெறுகின்றனர். திருமகளின் தோழி ஒருத்தி இந்த மன நிலையில் பேசுவதாக அழகாக அன்னமய்யா பாடியுள்ளார்.

''ஓ உயிர்த்தோழி! உன்னால்தான் தலைவன் பெருமை அடைந்திருக்கிறான். ஆனால் உலகத்தாருக்கு அந்த உண்மை தெரியாது.

உன் தலைவனுக்கோ திருமறுமார்பன் என்று பெயர். இந்தப் பெயர் எப்படி வந்தது? தலைவன் மறந்துவிட்டான் போலும்! உன்னுடைய கடைக்கண் தலைவன் இதயத்தில் நாட்டப்பட்டது. அதனால் காயம் ஏற்பட்டது. உலகத்தாரால் அவன் திருஉறை மார்பன் என்று அழைக்கப்படுகிறான்.

உன் கண்ணனுக்கு நீலவண்ணன் என்று பெயர். அந்தப் புகழ் எப்படி வந்தது தெரியுமா? உன் பிரிவினால் அவன் வாட்ட மடைந்தான். அவனுடைய நிறமே மாற்ற மடைந்தது. அவன் கறுத்துப் போனான். உலகத்தாருக்கு இந்தக் காரணம் தெரியாது. நீலவண்ணன் என்று பாடுகிறார்கள்.

உன் காதலனுக்குச் சக்கரபாணி என்று பெயர். எக் காரணத்தால் இப்பெயர் வந்ததோ தெரியுமா?

சக்கரம் போல இருக்கும் உன் கொங்கைகளைச் சக்கரம் போல அணைத்து அவன் சக்கரபாணி ஆனான்.

உன் தோழனுக்குப் பீதாம்பரன் என்றும் பெயர் உண்டு. எதற்குத் தெரியுமா? உன் பொன்மேனி ஊடலினால் பீதாம் பரன் ஆனான்.

உன்னை எவ்வப்பொழுதும், எல்லாப் பக்கங்களிலும் தழுவும் ஆர்வம் உள்ளவனாதலால் நான்கு கைகள் உள்ளவனானான்.

உன்னைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். உனக்கும் எல்லையில்லா இன்பம் கிடைத்த தல்லவோ!'' (12-376).

மகாகவி என்றும் வாழும் கவிதைகளைப் படைக்கிறான்; அதே நேரத்தில் அவன் வாழும் காலத்தையும் மறந்து விடு வதில்லை. அன்னமய்யா தான் வாழ்ந்த கால மக்கள் பேசிய மொழி, பழகிய பழக்கம் இவற்றையும் தன் கவிக்கு உரமாக்கிக் கொண்டுள்ளார். அத்திறனைப் பின்வரும் திருவேங்கடவன் காதல் பாட்டு ஒன்று காட்ட வல்லது.

தலைவன் யாரோ ஒரு புதியவளை நேசிக்கிறான். பழைய காதலிகள் தலைவனின் இந்தப் போக்கைக் கண்டு கோபப்பட வில்லை. ஆனால் புதியவளால் தங்கள் தலைவனாகிய திருவேங் கடவனுக்குக் கேடு ஏதேனும் வந்துவிடுமோ என்று அஞ்சு கிறார்கள். புற அழகைப் பார்த்தே அன்பு கொண்டு விட்ட நம் தலைவனுக்கு அவளால் என்னென்ன துன்பம் வருமோ என்று கலங்குகின்றனர்.

பெரியாழ்வார் போல இங்கு அன்னமய்யா ஆண்டவன் வாழ்வு குறித்து ஆர்வம் கொள்கிறார். ''ஏழுமலையா! கோவிந்தா!'' என்ற எல்லாரையும் பக்தனாகக் கொண்டு விடு கிறானே, ஆராய்வதில்லையே என்று உண்மை பக்தர்கள் வருந் தும் மன நிலையும் இதில் பிரதி பலிப்பதைக் காணலாம்.

''நாம் ஏன் சொல்ல வேண்டும்? அவரே தெரிந்து கொள் வார். நமக்கு ஏன் வீண் சக்காளத்தி சண்டை.

நம் காதலர் அவளை விரும்பினார். அவளைப் பற்றி நம் காதலருக்கு ஒன்றும் தெரியாது. மேல் வண்ணத்தைப் பார்த்து மயங்குகிறார்.

அவளுடைய இதழ் மென்மையாய் இருக்கலாம்; ஆனால் வாக்கோ மிகவும் கூரானது. நம் கணவர் எப்படி அவளிடம் துன்பப்படுவாரோ. முகம் சந்திர பிம்பம். ஆனால் அவளுடைய பார்வை உயிர் வாங்குபவை. எப்படி அவளுடைய சேர்க்கை இருக்குமோ!

அவள் கைகள் இளம் துளிர்கள். ஆனால் அவள் நகங்களோ மிகவும் கூரானவை. எப்படி நம் கணவன் அவளுடன் நட்பு கொள்வாரோ? அவள் சிரிப்பு, கற்பூரம். ஆனால் அவளுடைய நடத்தையோ காரத்தன்மை உள்ளவை. எப்படி அவளிடம் காதல் கொண்டாரோ! அவளுடைய கொங்கைகள் உறுதியானவை. ஆனால் அவள் நாணமற்றவள்.

முன்னுக்கு வணக்கம் பல செய்வாள்; பின்னால் வாழ்வை அழிக்க முயல்வாள். இவற்றை யெல்லாம் அவர் அறிந்து கொண்டால் நல்லது. அறிந்து கொள்வார். அறிந்து கொண்டு அவர் வாழ வேண்டுமே!'' (20-12).

தலைவனைப் பிரிந்த தலைவி உண்ணவில்லை; உறங்கவில்லை; தலைவன் நினைவில் தன்னை மறந்து ஏங்கி வருந்தி வாடுகிறாள். அன்னமய்யா தன் கவி நலம் புலப்பட அழகாக ஒரு பாட்டில் தலைவியின் இந்த அன்புக் காட்சியைப் படைத்து நாமும் காணுமாறு செய்கிறார்.

''தலைவா! கேட்டாயோ இந்தச் சேதி! உன்னுடைய அருளுக்குத் தலைவி எப்படி ஏங்குகிறாள் தெரியுமா!

உண்ணுமல் நோன்பு இருப்பாரைக் கண்டால் உனக்கு விருப்பமாம் என்று அறிந்து நேற்றிலிருந்து அவள் உண்பதில்லை.

காட்டில் இருந்து தவம் செய்பவர்தான் உனக்கு விருப்பமானவர் என்று அவள் வீட்டை விட்டுத் தோட்டத்திலேயே அசையாமல் உட்கார்ந்திருக்கிறாள்.

உன்னை மனத்திலே எப்பொழுதும் நினைப்பவர்தாம் உன்னவர் என்று அவளறிந்து கன்னத்தின்மேல் கைவைத்தபடி உன்னையே நினைந்து ஏங்குகிறாள்.

நீ தேவன், இரவில் உறங்காய், உன்னை வந்து காணும் மானிடர்க்காகப் பகலும் உறங்காய். உன் குணம் அறிந்து கொண்டோ என்னவோ இவள் நீ இரவில் வந்து கருணை புரிவாயோ பகலில் வந்து அருள்வாயோ என்று எண்ணி எண்ணி உன் வரவு நோக்கி இரவும் பகலும் உறங்காதவள் ஆனாள்.

உண்ணாமல் உறங்காமல் உன் நினைவில் ஏங்கும் இவள் மெலிந்த உடல் விரக தாபத்தால் வியர்வை நீர் முகிழ்த்த மேனியளாய் இருக்கிறாள். என்றாலும் வியர்வையை அவள் துடைப்பதில்லை. ஏன் தெரியுமா? நீ நீரில் வாசம் செய்பவன் என்று யாரோ அவளுக்குச் சொல்லி யிருப்பதால்.

இப்படி எல்லாம் உனக்காக ஏங்கும் இவள் நற்குணம் அறிந்து நீயும் இறுதியில் சேர்த்துக் கொண்டாய்'' (12.6)

தலைவியின் அழகு, அவள் பிரிவால் வருந்தும் நிலை, அதனால் தலைவியின்பால் பொறாமை கொண்டார் பெற்ற கொடிய மகிழ்ச்சி, இதற்கெல்லாம் காரணமான திருவேங்கடவனின் புறக்கணிப்பு ஆகிய இத்தனை உணர்வுகளையும் ஒரு பாடலில் அன்னமய்ய குழைத்துத் தருகின்றார்.

''ஓ தலைவா! பார்த்தாயா? எப்படி இருந்தவள் எப்படி ஆகிவிட்டாள்!

உன் தலைவியின் முகம் சந்திரனைவிட அழகானது. சந்திரனுக்கோ தனக்குச் சமமான ஒரு முகம் இருப்பதால் பொறாமை. மனதிலே அவன் இவ்வளவு நாள் புகைந்து கொண்டிருந்தான். ஆனால் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இன்று உன் பிரிவினால் தலைவி வாடிக் கொண்டிருக்கிறாள். ஆதலின் அவளுடைய முகம் வெளுத்தது. சந்திரன் வென்று விட்டான்.

இதே போல் மன்மதனின் அம்புகளுக்கும் தலைவியின் கடைக் கண்ணின்மீது பொறாமை. நீ அவளைப் புறக்கணித்து

விட்டாய். ஆதலின் அவளுடைய கடைக்கண் ஒளி மழுங்கி விட்டது. மன்மதனின் அம்புகள் வென்றுவிட்டன.

அவளுடைய உடல் மலர் மணத்துடன் மணக்கும். மலர் களெல்லாம் லஞ்சம் கொடுத்து அந்த மணத்தை வாங்கி யிருந்தன. இப்போது அவள் வாடியதால் அம்மலர்கள் அந்த மணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டன. நீயும் தலைவியை அருளுடன் சேர்த்துக் கொண்டாய்.'' (12.36)

சோதிடர்கள் இராசிகளையும், அங்குச் சஞ்சரிக்கும் கிரகங் களையும் பார்த்துப் பலன்கள் சொல்லுவது வழக்கம். நங்கை யின் உடலில் எல்லா இராசிகளும் உள்ளன என்று அழகாக அன்னமய்ய ஒரு பாடலில் கூறுகின்றார்.

''வில் போன்று புருவம் இருப்பதனால் தனுராசி. துள்ளும் மீன் போன்ற கண்ணுடையவள் ஆதலின் மீனராசி. நிறைந்த குடங்கள் போன்ற கொங்கைகள் உள்ளவள் ஆதலின் கும்ப ராசி. சிங்கம் போன்ற சிறு இடையாள். ஆதலின் சிம்மராசி. அவள் கன்னி, ஆதலின் கன்னிராசி. தங்கத்துடன் போட்டிப் போடக் கூடியவள் ஆதலின் துலாராசி. கூரான நகங்கள் உள்ள வள் ஆதலின் விருச்சிகராசி. பருவச் செழிப்பு அவளுடைய உடம்பில் தவழுவதனால் விருஷபராசி. சொல்லிலும் செயலி லும் மிகவும் எசச்ரிக்கையானவள் ஆதலின் கர்கடகராசி. சிவந்த இதழ் உடையவள் ஆதலின் மேஷராசி· உன்னைக் கவர்ந்ததனால் மிதுனராசி.'' (12. கீ43)

அன்னமய்ய கீர்த்தனை ஒவ்வொன்றும் ஒவ்வொரு புதுப் புது உத்திகளைக் கொண்டு ஒன்றுக்கொன்று சிறந்து விளங்கு கின்றன. விடுகதை வடிவில் கற்பார் கவனத்தை ஈர்க்குமாறு பாடுவது அத்தகு உத்திகளில் ஒன்று. அந்த உத்தியைப் பயன் படுத்தித் திருமாலின் பத்து அவதாரங்களையும் கீழ்வரும் கீர்த் தனையில் அன்னமய்யா அமைத்திருக்கும் அழகு படித்துப் படித்து மகிழத்தக்கது.

''அவன் யாரோ தெரியாது. ஆனால் அவன் அருகிலேயே இருக்கிறான். என்னுடைய கருத்துகளில் நிலைத்து வாழ்கிறான்.

அவனுக்குச் சிறகு போன்ற செதிள்கள் உள்ளன. ஆனால் அவன் ஆகாயத்தில் பறக்கமுடியாது. அவன் பதுங்கும் பழக்கம் உள்ளவன். ஆனால் அவன் கள்ளன் அல்லன். அவன் நகங்களை வளர்ப்பவன்தான். ஆனால் பரத்தன் அல்லன்.

அவன் குள்ளன்தான். ஆனால் ஆகாயத்தை விட உயர்ந்தவன். அவன் சண்டை பிடிப்பவன்தான். ஆனால் அதே வேளையில் முனிவர்களைப் போல் வேடம் போடக் கூடியவன். பெண்களுக்காக போர் செய்பவன். ஆனால் எல்லாம் துறந்தவன் போல் காட்சி அளிப்பவன். தன் செயல்களை ஓர் உள் நோக்கத்துடன் செய்பவன்.

பெண்களைத் தன்பால் இழுக்கக் கூடியவன். ஆனால் அவர்களுடைய மோகத்திற்கு ஆளாகாதவன். குதிரைகளை நடத்த வல்லவன். ஆனால் மாவுத்தன் அல்லன். அவன் யார் தெரியுமா? திருவேங்கடாசலத்தின் மேல் திரியும் பெருமாள்'' *(11-8)*

அவனுக்குச் சிறகு போன்ற செதிள்கள் என்று குறிப்பிட்டது மச்சாவதாரத்தை; பதுங்கும் பழக்கம் என்றது கூர்மாவதாரத்தை; தாழ்ந்திருப்பவன் என்பது வராக அவதாரத்தை; நகங்களை வளர்ப்பவன் என்பது நரசிம்மாவதாரத்தை; குள்ளன் தான் என்பது வாமனாவதாரத்தை: ஆகாயத்தை விட உயர்ந்தவன் என்பது திருவிக்கிராமவதாரத்தை; சண்டை பிடிப்பவன் என்பது பரசுராமன் அவதாரத்தை; பெண்களுக்காகப் போர் செய்பவன் என்பது கிருஷ்ணாவதாரத்தை: பெண்களைத் தன் பால் இழுக்கக் கூடியவன்; ஆனால் போகத்திற்கு ஆளாகாதவன் என்பது இராமாவதாரத்தை; குதிரைகளை நடத்த வல்லவன் என்பது கல்கி அவதாரத்தைக் குறிப்பனவாகும்.

அஃது ஓர் ஆயர்பாடி. குழந்தைக்கண்ணன் அங்கும் இங்கும் தவழ்ந்து விளையாடுகின்றான். கொழுகொழு வென்று பொலிவாக விளங்கும் அவன் அழகு ஆய்ச்சியர் அனைவரையும் கவர்கின்றது. ஒவ்வொருத்தியும் ஆசைதீர தூக்கித் திரியவும் முத்தமிடவும், அணைத்து மகிழவும் விழைகின்றனர். தாய் யசோதைக்குத் தன் குழந்தையின் அழகிலும், அதற்காகத் தேடி வரும் ஆய்ச்சியர் செயலிலும் பெருமை உண்டாகிறது. என்றாலும் குழந்தைக்குக் கண்ணேறு (திருஷ்டி) பட்டு விடுமோ

என்று கலங்குகிறாள். இந்த மனோநிலை கீழ்வரும் அன்னமய்ய கீர்த்தனையில் அழகுற விளங்கக் காணலாம்.

''வீணாக பிள்ளையைத் தொடாதீர்கள். மக்கு ஆகி விடுவான். அவன் தீரன். உயர்ந்த தேகம் உடையவன்.

சாயங்காலம் வெளியில் பிள்ளையை உலாவ விடாதீர்கள். பிள்ளைக்கு ஆகாது. மாயாவி ஆன ஒரு புழு அவனைக் கைகொடுத்து தன்மேல் ஏற்றிக்கொண்டு செல்ல இருக்கிறது.

வீட்டிற்கு வெளியே பிள்ளையைச் சுற்ற விடாதீர்கள். பாம்புகள் அலையும் நேரம். தம் புற்றுக்குள் செல்லும் நேரம். ஒரு திடமான நல்லபாம்பு பிள்ளையைத் தன்மேல் ஏற்றிக் கொண்டு செல்ல இருக்கிறது.

தொடக்கூடாதவர்கள் பிள்ளைப் பக்கம் போகாதீர்கள். பிள்ளைக்குத் தோஷம் ஏற்படலாம்.'' (12-247)

இப்பாடல் தெய்வீகக் கருப்பொருளை அகத்தடக்கிய அழகான ஒரு பாடலாகும். இங்கே தவழும் குழந்தை சாதாரண குழந்தையன்று, நாராயணனே ஆகும். எனவே அவர் பரிவாரம் எல்லாம் மானுடர் கண்ணுக்குத் தெரியாமல் அங்கே அவரைச் சுற்றி இருப்பது இயல்பே. மாயாவியான ஒரு புழு என்பது கருடாழ்வாரைக் குறிக்கும். திடமான நல்லபாம்பு ஆதி சேடனாகும். தோஷமுடையவர் பாவிகளாவர். இப்படி யசோதை மனநிலையில் அன்னமய்ய பாடுகின்றார்.

'மனத்துக்கண் மாசு இலனாதல் அறம்' என்றார் வள்ளுவர். மனத்தில் கொண்ட இறையன்பே பக்தி என்கிறார் அன்னமய்யா. அகத்தே அன்பின்றி,புறத்தில் செய்கின்ற செயல்களும் சடங்குகளும் பயனற்றன என்பதைக் கீழ்வரும் கீர்த்தனை மூலம் அவர் தெளிவாக்குகின்றார்.

''ஹரி பக்தியே முக்கியம். பிற புறச் சடங்குகளினால் பயன் ஒன்றும் கிட்டாது.

தண்ணீரில் இருந்து மூழ்கித் தவம் செய்வது பெரிது அல்ல. மீன் தன்னீரில் தானே இருக்கிறது, கொக்கு ஒரு கால் மேல்

தூக்கி நின்று வானத்தை நோக்குகின்றது. ஆனால் அது தவம் ஆகுமா? உலக வாழ்க்கையில் மிகுந்த ஈடுபாடு உள்ளவன் சித்தன் அல்லன்.

புலிகள் குகைக்குள் இருப்பதால் அவை துறவிகள் ஆகா. கரடி தாடி வளர்ப்பதால் சான்றோன் ஆகாது. பறவைகள் ஆகாயத்தில் பறப்பதால் தேவதைகள் ஆகிவிடுமா? குரங்கு காட்டில் இருப்பது வனவாசம் ஆகாது.

மரங்கள் பேசாதிருத்தல் மௌன விரதம் ஆகாது. சின்ன பிள்ளைகள் உடுப்பதில்லை. அவர் எல்லாம் துறந்த திகம்பரர் ஆகமாட்டார்கள். திருவேங்கடத்தான் மீது பக்தியுள்ளவன் எது செய்தாலும் உலகம் ஏற்றுக்கொள்ளும்'' (2-62)

நீரினில் மூழ்கியும் நிலத்தில் ஒரு கால் தூக்கி நின்றும், கனிகளைத் தின்றும். கானில் திரிந்தும், குகைகளில் வாழ்ந்தும் தாடி வளர்த்தும், யோகம் செய்தும், மௌனம் இருந்தும், ஆடை அணியின்றித் திரிந்தும், தவம் பல செய்தாலும் ஆண்டவன்பால் உண்மையான பக்தி இன்றேல் பயனில்லை என்று தெளிவாக இப்பாடலில் அன்னமய்யா விளக்குகின்றார்.

அவனன்றி ஓரணுவும் அசையாது. மானிடன் என்னென்னவோ நினைக்கிறான். ஆனால் இறைவனின் திருவுள்ளப்படிதான் செயல்கள் நடக்கின்றன. இந்த உண்மை உணராது ''நான், நான்'' எனச் செருக்குற்று வருந்தும் மக்கள் பலர். இந்த உண்மையை மூன்று உவமைகளினால் கீழ்வரும் கீர்த்தனை மூலம் அன்னமய்யா உணர்த்துகிறார்.

பெருமாளின் மாயையை யார் அறிவார்? யாரும் அறியார்.

பல ஆண்களின் மத்தியில் ஒரு பெண் இருந்தால் எல்லா ஆண்களின் பார்வையும் அவளின் மேல்தான் இருக்கும். ஆனால் எல்லாரின் அணைப்பில் இருக்கமாட்டாள். ஆனால் யாரும் அவள் ஆசையில் கட்டுண்டு தவிப்பார்.

புளியினால் செய்யப்பட்ட புளியங்கறியைப் பார்த்தால் யாவருக்கும் வாய்ஊறும். ஆனால் நாக்குக்குப் புளிப்பு உணர்ச்சி

தின்ருல் அன்றித் தெரிவதில்லே. பார்த்துச் சுவைத்தது போல் பாவனே செய்து கொள்வதோடு சரி.

திருவேங்கடத்தானின் தேரை இழுப்போரெல்லாம் தாங்கள் இழுப்பதாக நினேப்பார்கள். ஆனுல் அப்பெருமான் அவர்களின் ஆத்மாக்களில் இருந்து காரியத்தை நடத்தியதை உணரமாட்டார்கள். ஒரு ஆணவத்துடன் மிதப்பார்கள்.

பொய்யான புற வேடங்களால் பயனில்லே. 'உண்மை பக்தியே வேண்டும்' என்று அன்னமய்ய பாடியதை முன்பு கண்டோம். அதற்காக வாழ்வை ஒழுங்குபடுத்தும் புறநெறிகளே யெல்லாம் விட்டுவிட வேண்டாம். அப்படிச் செய்வது கேடாகும். வளர்கின்ற மனிதனே ஒழுங்கு படுத்தி உயர்த்துவதற்கு மன அடக்கமும் உடல் ஒழுக்கமும் இன்றியமையாதன. இந்த நினேவில் பின்வரும் கீர்த்தனே அமைந்துள்ளது.

''தெய்வமே! ஆசாரங்களேஅதற்காகத் தான் செய்கிறேன். ஆதலின் என் மனதை உன்மேல் நிலேக்க விடுவாயாக.

கால்நடைகளேக் கட்டாமல் விட்டு விட்டால் அவை பயிரை அழித்துவிடும். ஆனுல் அவற்றைக் கட்டி மேய்த்தால் தான் செய்யக்கூடிய வேலேகளேச் செய்யும். அதேபோல் பிடிப்பு விட்டால் மனம் நிலேயில்லாமல் சுற்றும். நியமங்களே அல்லது கட்டுப்பாடுகளே விடாமல் இருப்பவனுக்கு எல்லாம் கைகூடும்.

யோக க்ஷேமங்களேக் கவனிக்காததால் சேவகர்கள் நாடு விட்டு நாடு செல்வார்கள். அவர்களே நன்ருகப் பார்த்துக் கொண்டால் எங்கும் செல்லமாட்டார்கள். படி அளப்பவனிடத்தில் பாசம் கொள்வார்கள். அதேபோல் மனம் நிலேயில்லாமல் தவிக்கும் உடலே அடக்கினுல் பணிந்து பணி செய்யும்.

கை நழுவினுல் பிடிக்க முடியாமல் கிளிகூட மாடிக்குப் பறந்துவிடும். ஆனுல் அதை வரவழைத்துக் கூட்டில் அடைத்தால் ''ராமா'' என்று புகழும். இதேபோல் நினேக்காமல் இருந்தால் மனம் எங்கேனும் சுற்றும். திருவேங்கடவனே நேசித்தால் அவன் நம் கைக்குள் அடங்குவான்'' (7-107)

திருமாலின் திவ்விய கல்யாண குணங்களில் ஒன்று அடியவன் குற்றம் செய்தாலும் அதனைப் பொருட்படுத்தாது ஆட்கொண்டு அருளுவதாகும். குற்றம் பார்க்கின் சுற்றம் ஏது? எல்லாம் வல்ல இறைவனே அடியவன் குற்றத்தைப் பொறுத்து ஆட்கொள்ளாவிட்டால் அவன்கதிதான் என்ன? இந்தக் கருத்தமைந்த கீர்த்தனை பின் வருவதாகும்.

''திருவேங்கடவா !

நான் நீசன் தான். ஆனால் நான் உனக்குச் சொந்தமானவன், என்னை விட்டுவிடுவது அவ்வளவு எளிது அல்ல. நீயும் என்னைக் காப்பாற்றாமல் தப்பமுடியாது.

முறையுடன் கல்யாணம் செய்து கொண்ட மனைவியுடன் வாழ்ந்துவிட்டுப் பின் அவளை விட்டுவிடலாகாது. அவள் அழகாக இருந்தாலும், அழகு சீர் குலைந்தவளாக இருந்தாலும் சரி. தன்பால் நம்பிக்கைகொண்டு எந்நேரமும் சேவைசெய்யும் மனையாளை விட்டு விடுவது சரியல்ல.

தன் வீட்டைக் காக்கும் நாய் எப்படி இருந்தாலும் இரக்கத்துடன் உணவு போடுகிறோம். தன் வயிற்றில் பிறந்த குழந்தை தன்னிடம் வராமல் இருந்தாலும் கோபப்படுவது இல்லை.

தான் வளர்த்த கிளி தன்னை வைதாலும் முத்தமிடுவோமே அன்றி அதைத் துன்புறுத்துவது இல்லை. திருவேங்கடத்தானே நின் பக்தர்களின் தப்பிதத்தை மன்னிப்பது அறம் அல்லவா?'' (2—282)

நல்ல கணவன், அழகு குறைந்தாலும் மனைவியைக் கை விடமாட்டான். நாய் மெலிந்து முதிர்ந்தாலும் சோறு போடுகிறோம். எங்கிருந்தாலும் குழந்தையின் வாழ்வையே தாயுள்ளம் நினைக்கிறது. கிளி என்ன பேசினாலும்வளர்ப்பவர்க்கு இன்பமே. இந்த உலகியல் காட்சிகளைக் காட்டி தான் எப்படி இருந்தாலும் திருவேங்கடவன் ஆட்கொள்ளக் கடமைப் பட்டவன் என்பதை இப்பாடலில் அன்னமய்யா நிலைநாட்டுகிறார்.

மானிடனிடம் இயல்பாக காம, குரோத உலோபமதம் முதலிய குற்றங்கள் அமைந்துள்ளன. 'கண்ணா! இத்தகைய குற்றங்கள் என்னிடமும் உள்ளன. என்னிடம் மட்டுந்தானா? உன்னிடம்கூட உள்ளனவே! எனவே என்னிடமும் உன்னிடமும் பொதுவாக இக்குற்றங்கள் நிலவுகின்ற காரணத்தால் தான் என்னை நாடி நீ வருகிறாயோ!' என்று கண்ணபெருமானின் குழந்தைத் திருவிளையாடல்களை அழகாக அனுபவிக்கிறார் அன்னமய்யா கீழ்வரும் கீர்த்தனையில்.

''திருவேங்கடவா! எதற்காக நீ என்னிடம் வருகிறாய் என்பது எனக்குத் தெரியும். உனக்கு வேண்டியது எல்லாம் என்னிடம் இருக்கின்றன. அதற்காகத்தான் நீ என்னைத் தேடி வருகிறாய்.

நீ காமுகன். கோபிகள் என்றால் உனக்கு உயிர். அவர்களோடு பழகுவதை நீ விரும்புகிறாய். நானும் காமுகன்தான். நீ ஏன் என்னோடும் சேரலாகாது?

நீ கோபக்காரன். கம்சனிடத்திலே பெருங்கோபம் கொண்டவன். என்னிடமும் அந்தக் குணம் உள்ளது. எனவே நீ ஏன் என்னோடும் சேரலாகாது?

நீ உலோபி. யமுனா நதிக்கரையில் அன்று கோபிகளுக்குச் சேலை கொடுக்காது வஞ்சித்த கஞ்சன் நீ. அந்த உலோபகுணம் என்னிடமும் உள்ளதே. எனவே நீ ஏன் என்னோடும் சேரலாகாது?

மருத மரங்களை மாய்த்து வீழ்த்தும் மதம் கொண்டவன் நீ என்னிடமும் அந்த மதம் (அகங்காரம்) இயல்பாகவே இருக்கிறது. எனவே நீ ஏன் என்னோடும் சேரலாகாது?

சிசுபாலன்பால் உனக்குப் பகை உள்ளது. என் உள்ளத்திலும் அக்குணம் நிறைந்து உள்ள செய்தி நீ அறியாததா? எனவே நீ ஏன் என்னோடும் சேரலாகாது?

உன் அடியவர்கள்பால் உனக்கு எப்போதும் மோகம். பிறந்ததுதொட்டு என்னிடமும் அந்தத் தன்மை வளர்ந்துவந்து கொண்டிருக்கிறது. எனவே நீ ஏன் என்னோடும் சேரலாகாது.''

இப்படிப் பழிப்பது போலப் புகழ்ந்து பாடும் அழகுஇந்தக் கீர்த்தனையில் விளங்குகிறது.

பன்னிரண்டு ராசிகளையும் பயன்படுத்தி அன்னமய்யா பாடிய அகப்பாடல் ஒன்று கண்டோம். நவமணிகளையும் வைத்துக் கீழ்வரும் கீர்த்தனையை அற்புதமாகப் பாடியுள்ளார் அவர்.

''ஒருத்தி மகனுய்ப் பிறந்து ஓர்இரவிலேயே இன்னொருத்தி மகனுக ஒளித்து வளர்ந்தவன் கண்ணன். அவன் தேவகி மகன் மட்டுமல்ல; யசோதையின் குழந்தையும் ஆவன். ஒரு வீட்டுக்கு முந்திக் கொண்டு வந்த முத்து அவன். இந்தக் கோபிகளுக்கு உள்ளங்கை மாணிக்கம். பகைமை கொண்ட கம்சனுக்கோ வைரம். கருடன் ஏறி உலகம் முழுதும் வலம்வரும் மரகதம்.

எங்களுக்கு அருகில் எங்களோடு இருப்பவன் இந்தச் சின்ன கண்ணன். ருக்குமணி செவ்விதழுக்குப் பவளமாவன் அவன். கோவர்த்தன கிரியைக் குடையாய்ப் பிடித்து அன்று ஆயர்களைக் காத்த கோமேதகம் அவன். இருபுறமும் சங்கு சக்கரம் தரித்த வைடூரியம் அவன். எங்கள் அனைவருக்கும் கதியாய் இருந்து காக்கும் கமலக் கண்ணன் இவனே!

காளிங்கன் தலையின் மீது நடன மாடிய புஷ்பராகம். திருவேங்கட மலையில் வீற்றிருந்து அருளும் இந்திர நீலம். திருப் பாற்கடலை விட்டு என்றும் அகலாத சிறந்த இரத்தினம் பிரம்மதேவனைப் படைத்த திருக்கமலத்தையே தொப்புழாகக் கொண்டுள்ள இவன் ஒன்றும் அறியாத சிறு குழந்தைபோல் திரிகின்ருன்''. (9-258)

இன்னொரு கீர்த்தனையில் திருமாலை அன்னப் பறவையாக உருவகித்து அழகுறப் பாடுகிருர் அன்னமய்யா.

'பொங்கிப் பாயும் புனலின் மேல் மேடு பள்ளங்களை உருவாக்கும் அன்னம் இது. செந்தாமரைப் பொய்கையில் நீந்தும் அன்னம் இது. 'மானச சரோவர'த்தில் வாழும் அன்னம் இது.

பாலை நீரிலிருந்து பிரித்துத் தூய பாலில் மட்டும் உலவும் அன்னம் இது. தெய்வ சிந்தனையுடன் பரமாத்மாவைத் தெரிந்து கொண்ட (பரமஹம்சர்) நெஞ்சில் நிலவுவது இது.

தன் முட்டைகளைத் தன் நீண்ட பெரிய சிறகுக்குள் வைத்துக் காத்துப் பொரித்து வளர்க்கும் இந்த அன்னம் திருவேங் கடத்தில் தன் உடலை வளர்த்துக் கொள்கிறது.'' (5–61)

இந்தக் கீர்த்தனை மூலம் தாள்ளபாக்க அன்னமய்யா உலகுக்கு உணர்த்துவது இது.

ஊழிதோறூழி உலகம் காக்கும் திருமால் தூய்மையாலும் ஏற்றத் தாழ்வு இன்மையாலும் அன்னமாக உருவகிக்கப் பட்டுள்ளான். ஊழி முடிவில் நீர் மீது ஆலிலை மீது பள்ளி கொண்டு அருளியதைக் குறிப்பது முதல் அடி. தாமரை யாளாகிய திருமகளோடு திகழ்வது அன்னம்; தாமரைப் பொய் கையில் நீந்துவதாகக் குறிக்கப் பெற்றுள்ளது. கங்காநதி பிறப் பிடமாகிய 'மானச சரோவரம்' என்னும் குளிர்ப் பொய்கை அன்னம் சிறப்பாகத் தங்கி வாழும் நிலையமாகும். இதற்கு இன்னொரு பொருள் மனமாகிய பொய்கை என்பது ஆகும். உயிர்களின் மானச சரோவரத்தில் திருமால்உலவுகிறான் என்பது இதன் உள்ளுறை. அன்னம் பாலிலிருந்து நீரைப் பிரித்துப் பாலை மட்டும் பருகவல்லது. திருமால் உயிர்களிடமுள்ள குற்றங்களை நீக்கி குணமாக்கி ஆட்கொள்ளவல்லவன்.

திருமாலின் திருவடியை அடையும் நெறிகள் பல. அவற்றுள் ஒன்று ஞான நெறி. 'இந்த ஞானம் வந்தால் பின் நமக்கெது வேண்டும்' என்பர் பாரதியார் வேறோரிடத்தில். அஞ்ஞானமே நரகமாய்த் தோன்றுவது ஞானத் தெளிவே பேரின்பம் என்பர் அத்வைதிகள். கீழ்வரும் கீர்த்தனை ஞான நிலையை நமக்கெல்லாம் தெளிவாக்குகிறது. இதில் அன்ன மய்யா அத்வைதிகள் போல் அல்லாமல் திருவேங்கடவன் திருப்பெயர் ஒன்றே யாவரையும் காப்பது என்று கூறுகிறார்.

''பிரம்மம் ஒன்றே! பரபிரம்மம் ஒன்றே! பிரம்மம் ஒன்றே! பரபிரம்மம் ஒன்றே!

இதில் குறை நிறை ஒன்றும் இல்லை. அனைவர் நெஞ்சத் திலும் அரி குடிகொண்டுள்ளான். இதில் மனிதர்களாகட்டும் விலங்குகளாகட்டும் அனைத்தும் ஒன்றே.

பலவகை வசதிகளுடன் தூங்கும் அரசன் உறக்கமும் ஒன்றே. தரையில் படுத்துறங்கும் பாமரன் உறக்கமும் ஒன்றே. உயர் குலமெனக் கூறிக்கொள்ளும் பார்ப்பனன் திரியும் இடமும் ஒன்றே. தாழ்ந்தவன் இருக்கும் பூமியும் அதுவே.

தேவர் அடையும் போக இன்பமும் அதுவே. புழுக்களும் விலங்குகளும் துய்க்குக்கும் உடலின்பமும் அதுவே. இரவு பகல் பணக்காரர்களுக்கு மட்டும்தான் வந்து போகிறதா? ஏழைக் கும்தான்! அறுசுவை உண்டியால் ஆறும் பசியே கண்டதை உண்டபோதும் தணிகிறது. தீய நாற்றத்தை வீசும் காற்றே நல் மணத்தையும் கொண்டுவந்து தருகிறது.

மாபெரும் தோற்றங் கொண்ட யானைமீது காயும் வெய்யிலும் ஒன்றே! இழிந்ததாகக் கருதும் நாயின்மீது படும் வெய்யிலும் ஒன்றே!

நல்வினை தீவினை செய்தவர் அனைவரையும் காப்பது திரு வேங்கட முடையான் திரு நாமமே.'' (7–151).

'ஆசைக் கயற்றில் ஆடும் பம்பரங்கள்' இந்த உயிர்கள் 'ஆரா இயற்கை அவா' என்றார் திருவள்ளுவர். ஆசைவயப் பட்டு அல்லலுறும் இந்த மானிட இயல்பை அருள்பெற்ற அன்னமய்யா தன்மேல் இட்டுக்கொண்டு உலகத்து உயிர்களின் சார்பில் வருந்துவது பின்வரும் கீர்த்தனை.

''வளர வளர நாம் பெரியவர்களாகி விட்டதாக நினைக் கிறோம். ஆனால் எந்தப் பொருள் பற்றும் நம்மை விட்ட பாடில்லை.

நேற்று 'போதும் போதும்' என்று தின்று ஒதுக்கியஉணவு இன்றைய பசியை வளர்த்து உண்ணச் செய்கிறது, இரவில் புணர்ந்து இன்பத்தால் சேர்ந்த பெண்கள் மறு வினாடியே கேளிக்கையில் ஈடுபட ஆயத்தமாகிறார்கள்.

வேண்டாம் என்று புறக்கணித்த அழுக்குத் துணிகளையே துவைத்த பின் தேடி அணிய மனம் விரும்புகிறது. அணிந்து அழகு பார்த்துக் கழட்டிப் பெட்டியில் வைத்த அணிகளையே மீண்டும் அணிந்துகொள்ள உள்ளம் விழைகிறது.

நாங்கள் செய்த குற்றமோ நீ எங்களைக் கட்டிய பாசமோ இப்படி நாங்கள் உலகப் பொருள்களில் சிக்கிக் கொண்டுள்ளோம். இந்தப் பொறுப்பில் நாங்கள் மூழ்கித் தவிக்கிறோம். இந்த வாழ்வில் நாளும் நாளும் ஆசை வளர்ந்து கொண்டே போகிறது. (9-63)

அடுத்து ஒரு பாடல் மானிடக் குறையையும் அந்தக் குறை உணர்வும், உணர்ந்தபின் இறை அருள் நாடித் தவிக்கும் இயல்பும் புலப்பட அமைந்துள்ளது. அது:-

''காலமோ கடந்துபோயிற்று. வாழ்வு காட்டில் எரித்த நிலவாயிற்று.

பகை தோன்றியபோது அதிகாரிகளை வைதேன். நான் நினைத்த காரியம் நிறைவேறாத போது காலத்தைக் கடிந்து கொண்டேன். பொறுமை இழந்தபோது கர்ம வினையைப் பழித்து உரைத்தேன். என்னைக் காத்தருள யாரையும் காணேன்.

வளமாக வாய்த்த காலத்தில் தெய்வத்தைத் தூற்றினேன். நெஞ்சம் நிலைகொள்ளாமல் தவித்தபோது என்னையே நான் வெறுத்துக்கொண்டேன். சீற்றத்தால் சுற்றத்தாரைக் குறை கூறினேன். இப்போது எனக்குத் துணையாக இருப்பார் எவரையும் காணேன்.

இறுதியில் திருவேங்கடத்தானை சரண் அடைந்தேன். அவன் காத்தான். இப்படி அருள்புரிபவர் யாரும் இந்த உலகில் இல்லை. (9-55)

திருவித்துவக்கோட்டு அம்மான் குறித்து குலசேகரப் பெருமாள் பாடிய பதிகம் ஒன்று 'என்னதான் இறைவன் துன்பந்தரினும் நான் அவனையே பற்றிக் கிடப்பேன்'' என்று அமைந்துள்ளது. அடிக்க அடிக்க ''தாயருளையே நினைந்து அழும் குழந்தையைப் போல்'', ''இகழ்ந்தாலும் கொண்டானை அல்லால் அறியாக் குலமகள் போல்'', ''எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன் கோல் நோக்கி வாழும் குடி போல்'', ''வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால் மாளாதகாதல் நோயாளன் போல்'', ''எங்கும் போய்க் கரைகாணாது வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போல்'', ''அந்தரம் சேர் வெங்

கதிரோற்கு அல்லால் மலராச் செங்கமலம்போல்'', ''மைத் தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் பைங்கூழ்போல்'', ''தொடுகடலே புக்கன்றிப் புறம் நிற்க மாட்டாத தொக் கிலங்கு ஆறே போல்'', வித்துவக்கோட்டு அம்மானே நீ வேண் டாயே யாயிடினும் மற்றாரும் பற்றில்லேன்'' என்று பாடிய ஆழ்வார் கருத்துக்களின் சாரமாக அன்னமய்யா பின்வரும் கீர்த்தனையைப் பாடுகின்றார்.

''உன்னைவிட எங்களுக்கு உறவு வேறு யார்? நீ போற்றி னாலும் எங்களைத் தூற்றினாலும் உனக்கு எதிர் ஒன்றும் சொல் வோம்.

சீற்றத்துடன் தாய் ஒருத்தி தன் குழந்தையைக் கீழே விட் டாலும் அந்தக் குழந்தை தாயை விட்டுச் செல்லாது அல்லவா? அப்படியே என் குற்றங்களைக் கண்டு நீ வெறுத்தாலும் நின் திருவடிகளை நான் விடேன்.

கற்பிக்கும் ஆசிரியர் கோபத்துடன் வெறுத்து நோக்கினா லும் மாணவன் பாடத்தை விட்டுவிடுவானா? எங்கள் குணங்கள் உனக்குப் பிடிக்காவிட்டாலும் உனக்கே நாங்கள் வந்தனை செய்வோம்.

செவிலித்தாய் சினந்துகொண்டு பாலூட்டினால், குழந்தை குடியாது விட்டுவிடுமா? திருவேங்கடவனே! நீ என்னைக்காக்க மறுத்துக் கைவிட்டாலும் நான் உன்னை விடமாட்டேன்'' (9-166)

இந்தக் கீழ்வரும் கீர்த்தனையில் அன்னமய்யா இறைவ னுக்கு உரிய பொறுப்பை நினைவுறுத்துகிறார். சென்ற கீர்த் தனையில் ஆன்மாவின் கடமையைத் தன்மேல் வைத்து உணர்த் திய அன்னமய்யா இந்தக் கீர்த்தனையில் ஆன்மா மாயை வயப் பட்டுத் தன்னையும் தலைவனும் திருமாலையும் மறந்திருந்தாலும் உண்மையை உணர்த்தி ஆட்கொள்ள வேண்டிய கடமை அனைத் தும் வல்ல ஆண்டவனுக்கு உரியது ஆகும் என்று உலக ஆன்மாக் களுக்காகப் பரிந்து வேண்டுகிறார் அன்னமய்யா!

''எங்களுக்கு அறியாமை இயல்புதான். நீதான் எங்களைக் காத்தருள வேண்டும்.

தாயின் மடிமீது அமர்ந்து பால் குடிக்கும் குழந்தை தந்தை அழைத்தாலும் வருமா? அப்படியே மாயையில் மூழ்கிய உயிர்கள் உன்னிடம் தாமே வரத் தயங்குகின்றன.

தாய்ப்பறவையின் சிறகினுக்குள் ஒதுங்கி வாழும் குஞ்சுகள் நீண்ட கழுத்து உடையனவாயினும் மேலே பறந்து உயர முடியுமா? பல பிறவிகள் எடுத்தாலும் (பிரபஞ்சமாயையாகிய சிறகருக்குள் மயங்கி உயங்கும்) உயிர்கள் உயர்ந்து வைகுண்டத்தை அடைய முடியாது.

நீர்த்தவளை தண்ணீரில் வாழவே விரும்பும். பஞ்சுமெத்தை மேல் இருக்கச் சிறிதும் அது விரும்பாது.

''திருவேங்கடமுடையானே! நாங்கள் அஞ்ஞானிகள். (மாயையால் சூழப்பட்டவர்கள்.) எங்களுக்கு நின் பரஞானத்தை அருள் வாயாக!''

சென்ற கீர்த்தனையில் இறைவனின் கடமையை உணர்த்திய அன்னமய்யா கீழ்வரும் இந்தக் கீர்த்தனையில் அவனுடைய சுவாமித்துவத்தை நினைப்பூட்டிக் கடமைக்கு ஏதினைக் காட்டித் தன் பரிந்துரையை நிலைநாட்டுகின்றார்.

''திருவேங்கடம் உடையானே! உலகத்தில் தங்களுக்கே உரிய சொத்தை விட்டுவிடுவார் எவரேனும் உண்டா?. நான் உடைமை அல்லவா? என்னைக் காப்பது நின் கடமை அல்லவா?

தன் கால்நடைகள் காட்டில் திக்குத் தெரியாமல் அலைந்து கொண்டிருந்தால் சொந்தக்காரன் அவற்றைத் தேடி வீட்டில் சேர்ப்பது இயல்பே அல்லவா? ஆசைகளினால் இந்தப் பிரபஞ்சத்தில் அலையும் என்னைக் காத்து வீடுபேறு தருவது நின்கடமை ஆகும்.

வேளாண்மை செய்பவன் உன்னிப்பாகப் பயிர் காத்து முடிவில் தானியங்களைக் கூட்டில் சேர்ப்பது இயல்பே அல்லவா? அதுபோல நாங்கள் மீண்டும் மீண்டும் பிறந்து பிறந்து உழலாது எங்களைக் காப்பது நின் கடமையே ஆகும்.

கருவில் வளரும் குழந்தை தாயைக் காலினால் உதைத்தாலும் அதனை மனதில்கொள்ளாமல் அவள் சேயை வளர்ப்பது இயல்பே அல்லவா? ஓ இறைவா! நான் நின் வயிற்றில் உதித்

தவன். என்ன பிழை செய்தாலும் அருளோடு காப்பது நின் கடமை.''

இறைவனைத் தாயாக்கித் தன்னைக்கால் நடையாக்கிக்கூறிய இந்த அன்னமய்யா கற்பனை கம்பர் காவியத்தில் இன்னும் பொலிவோடு திகழ்வது இங்கு ஒப்பிட்டு மகிழத் தக்கது.

‘‘இராமா! தாய்ப் பசுவை அறியாத கன்று இல்லை; தன் கன்றைத் தாயும் அடையாளம் கண்டுகொள்ளும். உலகின் தாய் நீ. என்று எல்லோரும் சொல்கிறார்கள். அப்படியானால் ஐய! நீ எல்லாப் பொருள்களையும் அறிகின்றாய். ஆனால் அவை உன்னை அறியாமல் தடுமாறுகின்றனவே! இது என்ன மாயை அப்பா!'' என்று விராதன் இராமபிரானைக் கேட்பதாக கம்ப ராமாயணத்தில் அமைந்துள்ள பின்வரும் பாடலே அது.

**தாய்தன்னை அறியாத கன்றில்லை: தன்கன்றை**
**ஆயு மறியும்: உலகின்தாய் ஆகின் ஐய!**
**நீயறிதி எப்பொருளும்; அவைஉன்னை நிலையறியா;**
**மாயையிது என்கொலோ? வாராதே வரவல்லாய்!**

(ஆரணியா காண்டம் - விராதன்
வதைப் படலம்—54)

இறுதியாக ஒரு கீர்த்தனையை விளக்கி இப்பகுதியைத் தலைகட்டுகிறேம். அது வைணவ சம்பிரதாயத்தில் தலையாய கீர்த்தனை ஆகும். விசிஷ்டாத்வைதம் உலகிற்கு எடுத்துரைத்த ஒப்பற்ற ப்ரபத்தி மார்க்கத்தை உட்கொண்டது அது.

அந்த ப்ரபத்தி நெறி சாதி சமயம் கடந்தது; அறிவு ஒழுக்க சீலம் அறியாதாரும் பின்பற்றும் உரிமை தருவது. அரக்கர்குல வீடணனுக்கு அருள் சுரந்தது அந்நெறியே. அந்த அளப்பரும் பெருநெறியைப் பின்வரும் கீர்த்தனையில் அழகாகப் பாடுகிறார் தாள்ளப்பாக்க அன்னமய்யா அவர்கள்.

‘‘திருமலையப்பனே! அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே!'' என்று உன்னை அழைக்க என்ன படிப்பு வேண்டியிருக்கிறது' (எந்த நூலையும், வேதத்தையும், வேதாந்த சாரங்களையும் கற்காமலேயே அப்படி அழைத்து நின் அருள் பெறலாமே!)

வெண்ணெயைக் கையில் வைத்துக்கொண்டு யாராவது நெய்க்கு அலைவார்களா? உன்னை நெஞ்சில் நிரப்பிய பிறகு சத்தியம் எது எனத் தேடி அலையவேண்டுமா என்ன? விளக்கைக் கையில் ஏந்திக்கொண்டு எவனாவது கிணற்றில் விழுவானா? உனக்கு அடிமை ஆன பிறகு வேறு கர்மங்கள் எதற்கு?

செல்வன் ஆனபிறகு பின்னும் சந்தையில் பிச்சைக்கு எவனாவது அலைந்து திரிவானா? நாவில் நின் நாமம் ஒலித்துக் கொண்டே இருக்க இதர ஜபதப மந்திரங்கள் ஏன்? ஆற்றில் தண்ணீர் பருகித் தாகம் தீர்ந்தபின் கால்வாயை நாடி எவனாவது அதைப் புகழ்ந்து கொண்டு பொழுது போக்குவானா? எம்மைக் காக்க நீ இருக்கும்போது வேறு சிந்தனை எதற்கு?

ஆகாயத்தைப் பார்க்க ஏன் ஒருவரை மற்றொருவர் இடித்துக்கொள்ளவேண்டும்? எங்கும் நீயே நிறைந்திருக்க வீணாக ஏன் இவரையும் அவரையும் இதையும் அதையும் கேட்டுப் பொழுது போக்க வேண்டும். ஓ திருவேங்கட முடையானே! யாரையும் காப்பவனே!. 9-124.

**அன்னமய்ய வாழ்க ! அன்பர்நலம் வாழ்க !**
**கண்ணன்கழல் எல்லாம் காட்டும் ,வி வாழ்க !**
**வண்ணன்வேங் கடத்தான் வாழும்இசை தந்த**
**அண்ணல்புகழ் வாழ்க ! அன்னமய்ய வாழ்க ! !**

—*—